# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/= | இதழ் - 18 | 14.05.2023





ஏற்றுமதியாகும் உணவும் பானங்களும் 06



வேலியைச் சுற்றி .... 12



மண்ணில் இருந்து ஆபரணங்கள் 14


# குறைந்த செலவில் அதிக லாபம் தரும் மர முந்திரிகை செய்கை


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மீனவ சமூகப் பெண்களின் வாழ்வியல்



- காயந்திரி நளினிகாந்தன் -

இலங்கை எதிர்கொள்கின்ற கடுமையான பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவால் உணவுப் பொருள்களின் விலை பல மடங்கு உயர்ந்த பொருளாதார மட்டத்தில் பல நிலைகளில் மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இந்த நிலையில் பெண்களின் சமூக பொருளாதார நிலை பற்றிக் குறிப்பிட்டதக்க கவனம் செலுத்தப்பபடுவது அவசியமாகின்றது. அந்தவகையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மீன்பிடித்தொழிலைப் பிரதான ஜீவனோபாயமாகக் கொண்ட திருக்கடலூர் கரையோரச் சமூத்தில் வாழும் பெண்களின் வாழ்வியலை இக்கட்டுரை விபரிக்கின்றது

திருகோணமலை நகர் புறத்தை அண்டி அமைந்துள்ள கடலும் கடல்சார்ந்த நிலமாக திருக்கடலூர் மீன்பிடிக் கிராமமானது அமைந்துள்ளதுடன், சுமார் 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் மீனவக்கிராமமாகும் என்பதால் தொழிலுக்கு ஏற்ப அவர்களின் வீடுகள் மிக நெருக்கமான முறையிலமைந்துள்ள போதும் நூறுக்கும் மேற்பட்ட வீடுகள் இரண்டு அறைகளுடன் கூடிய அடிப்படை வசதிகளைப்பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. பலவீடுகள் நீண்டநாட்கள் திருத்தப்படாத ஓலைக் குடிசைகளாகவும் தகரக் குடிசைகளாகவும் உள்ளன.

பொதுவாக மீனபிடித்துறையானது ஆண்களுக்காக வடிவமைக்கப்பட்ட தொழிலாக இருப்பதாலும் மீன்பிடிச் சமூக மற்றும் கலாச்சாரங்கள் ஆணாதிக்க கட்டுமானத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளதாலும் இப்பகுதிப் பெண்கள் மீன்பிடி மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். எனினும் இத்துறையானது நிலையான வருமான மூலமாக இல்லாத நிலையில் பெண்கள் கடலுக்கு செல்லும் ஆண்களை அடிப்படையாக கொண்டு சிறுவியாபாரங்களான சிற்றுண்டிகள் மற்றும் உணவு உற்பத்தி செய்து விற்பனை செய்தல், ஓயில் போன்ற எரிபொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்து குடும்ப வருமானத்துக்கான ஆதாரமாக இத்தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

எனினும் தற்போதைய சூழலில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் பொருட்களின் விலையுயர்வு காரணமாக மிக மோசமாக பாதிக்கப்பட்

> “இங்குள்ள ஆண்களுக்கு மாற்றுத் தொழில்கள் செய்யக் கூடிய திறன் மற்றும் அறிவும் விருப்பமும் இல்லாததால் வருமானம் ஈட்டும் பொறுப்பும் தாமாகவே பெண்கள் மீது சுமத்தப்படுகின்றது. இதனால் அவர்கள் தமது தினசரி வீட்டுத் தேவைகளை சமாளிக்கத் தமது தங்க நகைகளை விற்றும் அடகு வைத்தும் கடன்வாங்கியும் தமது தினசரி வாழ்க்கையை கழிக்கவேண்டிய துரதிஷ்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.”

டுள்ள துறைகளில் மீன்பிடித்துறை முக்கியமான ஒன்றாகும். கடந்த 2022ம் வருடம் யூன் மாதத்தில் இருந்து இன்று வரையிலான காலப்பகுதியினை மிகவும் துன்பியல் நிறைந்த காலப்பகுதியாக தமது வாழ்நாளை கழிப்பதாக இரண்டு அறை



களை கொண்ட தகர வீட்டில் வாழும் நான்கு பிள்ளைகளின் தாயான திருமதி விக்னேஸ்வரி பதிவு செய்ததுடன், தமக்கான தொழில் வலுவூட்டல் பயிற்சிகள் அவசிய மானவை எனவும் அடையாளப்படுத்தினார்.

கடலுக்கு செல்வதற்கான எரிபொருள் செலவானது கடந்த காலங்களுடன் ஒப் பிடும்போது 4 மடங்கு அதிகரித்துள்ளதால் வருமானம் கணிசமான அளவு குறைந் துள்ளது. கடந்த காலங்களில் அதிகூடிய வருமானமாக மாதாந்தம் கிட்டத்தட்ட சாதாரண இயந்திரப்படகு உரிமையாளர் கள் ரூபா 50000 முதல் ரூபா 150000 வரையில் வருமானமாக பெற்று வந்த நிலையில் தற்போது ரூபா 5000 முதல் ரூபா 25000 மாத்திரமே பெறமுடிகின்றது இந்த நிலையானது தமது 45 வருட வாழ் நாளில் முதல் தடைவயாக எதிர்கொள்வ தாக தனது அனுபவத்தைப் பகிர்ந்த திருக் கடலூர் மகளிர் சங்கத்தலைவி கெங்கா தேவி, எரிபொருள் விலை உயர்வு சட்ட விரோத மீன்பிடி அதிகரிப்பு சந்தையில் மீனுக்கான கேள்வி கணிசமான அளவு குறைந்துள்ளமை போன்றவை தமது குடும்பத்தினையும் சமூகத்தினையும் மிக மோசமாக பாதித்துள்ளது என விபரித்தார்.

குடும்பங்கள் உட்கொள்ளும் உணவின் பெறுமானம் மற்றும் அளவுகள் கணிசமான அளவு குறைந்துள்ளதுடன் பெண்களின் வாழ்வியலை மிகவும் சவாலுக்குட்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இங்குள்ள ஆண்களுக்கு மாற் றுத் தொழில்கள் செய்யக்கூடிய திறன் மற்றும் அறிவும் விருப்பமும் இல்லாததால் வருமானம் ஈட்டும் பொறுப்பும் தாமாகவே பெண்கள் மீது சுமத்தப்படுகின்றது. தமது தினசரி வீட்டுத்தேவைகளை சமாளிக்க தமது தங்க நகைகளை விற்றும் அடகு வைத்தும் கடன்வாங்கியும் தமது தினசரி வாழ்க்கையை கழிக்கவேண்டிய துர திஷ்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் பெண்கள் தமது குடும்ப வருமானத்தை அதிகரிக்கவேண் டிய சூழலில் அதற்கான மாற்று நடவடிக் கைகளை கிராமத்திற்கு உள்ளேயும் வெளி யிலும் தொடர்ந்து தேடிவருகின்றார்கள். இது அவர்களின் குடும்பப் பொறுப்புக்கு மேலதிகமான இரட்டை சுமையாக உள்ள போதும் இங்கு அவர்களுக்கு வேறு தெரிவு இன்மையாலும், அதேவேளை வறு மையை சமாளிக்க பெண்கள் வருமானம் ஈட்டவேண்டிய இக்கட்டான நிலைக்கு முகம் கொடுத்து வருகின்றமையால் இவர் களுக்கு பரிச்சயமான சிற்றுண்டி வியா பாரத்தில் ஈடுபட ஆர்வம் காட்டமுனை கின்றார்கள். இருந்தபோதும் இவர்களது பகுதியில் தற்போது சந்தைவாய்ப்பு இன் மையால் வேறு இடங்களில் சந்தை



வாய்ப்பைத் தேட வேண்டிய கட்டயத்திற் குள்ளாகியுள்ளனர்.

திருகோணமலை நகர்பபகுதியை அண்மித்து இவர்களது கிராமங்கள் காணப் படுவதால், உணவகங்கள் ஏனைய தொழில் நிறுவனங்கள் அல்லது சுற்றுலா விடுதிகள் போன்ற வற்றில் வேலைவாய்ப் புக்கள் கணிசமான அளவு காணப்படுகின்ற போதும், இக்கிராமங்களில் வாழ்கின்ற பெண்களின் நடமாடுவதற்கான சூழல் இறுக்கமானதாக இருப்பதாலும் அதனை மீறிச்செயற்பட பெண்கள் விரும்பாததா லும் இவர்களின் உற்பத்திகளுக்கு சரியான சந்தைப்படுத்தல் தளத்தை அடைவதில் மந்த நிலை காணப்படுகின்றது. மேலும் போதியளவு உற்பத்தி திறன் இன்மை, சந்தைப்படுத்தல் முறைமைபற்றி அறி வின்மை சுற்றுலா துறைபோன்ற மாற்று தொழில்களை சாதகமாக பயன்படுத்தும் பார்வை இன்மை போன்ற காரணங்க ளால் இவர்களுக்கான வருமானத்தினை போதியளவு ஈட்ட முடியவில்லை. இதன் காரணமாக இவர்களின் உற்பத்தியை தமது கிராமத்துடன் மட்டுப்படுத்தவேண் டிய நிலைமையே காணப்படுகின்றது. மேலும் போதிய இடவசதியற்று நெருங்கி வாழும் பெண்களான இவஉகள் தமது நேரத்தை செலவிடுவதற்கு ஒன்றுகூடும் பண்பினை கொண்ட இவர்கள், தமக்கான திறன் பயிற்சிகளை பெறும் ஆர்வத்தினை யும் கொண்டு காணப்படுகின்றனர்.

எனவே, இங்குள்ள பெண்களை வலு வூட்டி ஆரோக்கியமான குடும்பச்சூழலை உருவாக்க முழு சமூகத்திற்கும் பால் நிலை சமத்துவம் தொடர்பாக அறிவூட்ட வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும் மீன்பிடித் தொழில் உடன் சார்ந்த தொழில் களில் பெண்களை ஈடுபடுத்துவதோடு மட்டுமல்லாமல், இவர்களின் சிறுவியா பாரத்தை விரிவுபடுத்தலுக்கு வேண்டிய திறன் பயிற்சிகள், சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்குவதன் மூலமாகவும் சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கான வழிவகைகளை மேற் கொள்ளுவதன் மூலமாகவும் மீனவ கிராம பெண்களின் வாழ்வியலில் சிறந்த மாற் றத்தை ஏற்படுத்தி ஆரோக்கியமான குடும் பச் சூழலை ஏற்படுத்த முடியும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# முதலீடுகளுக்கான தடையாக இருப்பது?

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளை இலங்கை தீவிரமாக முன்னெடுத்துவரும் நிலையில், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அவ்வப்போது அழைப்பு விடுத்துவருகின்றது. எந்தளவுக்கு முதலீட்டாளர்களை அரசாங்கம் வருந்தி அழைத்தாலும், முதலீட்டாளர்கள் இலங்கையைத் தவிர்ப்பதற்கு முக்கியமான காரணம் இங்கு காணப்படும் ஊழல்கள்தான் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலத்தில் சில முன்னேற்றங்கள் இருந்தாலும் கூட, நாடு முழுவதிலும் பரவலாகக் காணப்படும் ஊழல்களால் முதலீட்டாளர்களுக்கு நிச்சயமற்ற நிலையும் அவநம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதாகவும் இது குறித்து விரிவாக எழுதப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களைத் தேடி இலங்கை வந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில்தான் இந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான ஊழல்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுதான் முதலீட்டாளர் வசதி மையம் ஒன்று அமைக்கப்பட்டதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்திருக்கின்றார். நேரடி வெளிநாட்டு முதலீடுகளை வழிப்படுத்துவதற்கான ஒரு நிலையமாக அது செயற்படுகின்றது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். முன்னர் இவ்வாறான ஒரு பொறிமுறை இல்லாமையால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்கின்றார்.

முதலீடுகளுக்கான அனுமதியைப் பெறுவதில் இழுபறி நிலை, காலம் கடத்தல், அதனோடு இணைந்த ஊழல்கள் போன்றனதான் கடந்த காலங்களில் முதலீடுகளுக்கு தடையாக இருந்தது. அதிகாரிகள் மட்டத்திலான அதிகார துஷ்பிரயோகங்கள், வெளிப்படைத்தன்மையற்ற செயற்பாடுகள் போன்றவற்றை தடுக்க முடியாத நிலை இருந்தது. இதனால், முதலீடு செய்வதற்கு இங்கு வருபவர்கள், தாய்லாந்து, கொரியா அல்லது மலேஷியா போன்ற நாடுகளை நோக்கி தமது கவனத்தைச் செலுத்தும் நிலை இருந்தது. முதலீட்டாளர்களைப் பொறுத்தவரையில், தமது முதலீடுகளுக்கான பாதுகாப்பும், இலாபத்தைப் பெற்றுக்கொள்வதும்தான் இலக்காக இருக்குமே தவிர, இலங்கைக்கு உதவ வேண்டும் என்பது அவர்களது நோக்கமாக இருப்பதில்லை. அதனை நாம் எதிர்பார்க்கவும் முடியாது.

ஊழல்கள் முற்றாக களையப்பட்டு, முதலீடுகளுக்கான அனுமதியைப் பெறுவது இலகுபடுத்தப்பட்டு அதற்கான செயன்முறைகள் காலதாமதமின்றி – விரைவாகச் செய்யப்படக்கூடிய பொறிமுறை ஒன்றை உருவாக்கினால் மட்டுமே எதிர்பார்க்கும் முதலீடுகளை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும். அதனை நோக்கமாகக் கொண்டு சில நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. இதன் மூலமாக மட்டுமே பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள முடியும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....





## வாழைப்பழ ஏற்றுமதி

யாழ்ப்பாணத்திலிருந்து வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வது குறித்த கடந்த வார கட்டுரை மகிழ்ச்சியளிப்பதாகவும் சிறப்பானதாகவும் இருந்தது. வாழைப்பழச் செய்கையாளர்கள் அவர்களுக்கான உற்பத்திகளுக்கு போதிய வருவாயைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலையிலேயே இருந்தார்கள். வாழைப்பழம் மிகவும் குறைந்த விலையிலேயே சந்தைப் படுத்தப்பட்டது. அதனைவிட இயற்கை அழிவுகளையும் அவர்கள் சந்தித்தார்கள். அவற்றை நாம் நேரில் பார்த்திருக்கின்றோம். இப்போது, இதனை ஏற்றுமதி செய்வது உற்பத்தியாளர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. இது போன்ற கட்டுரைகளைப் பொருண்மியம் இதழில் எதிர்பார்க்கின்றோம்.

**எம்.கதிரவேல் - அச்சுவேலி.**

## நிலக்கடலைச் செய்கை

இலாபம் தரும் நிலக்கடலைச் செய்கை – இயற்கை முறையில் செய்வது எப்படி? என்ற தலைப்பிலான தமிழர் பொருண்மியம் கடந்த வாரம் வெளியிட்டிருந்த கட்டுரை எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நிலக்கடலைச் செய்கையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், அதனை உற்பத்தி செய்ய விரும்புபவர்களை ஊக்கப்படுத்துவதாகவும் அந்தக் கட்டுரை அமைந்திருந்தது.

அதேபோல கோழி வளர்ப்பில் உள்ள பிரச்சினைகள், அவற்றுக்கான நோய்த் தடுப்பு போன்றன குறித்து டாக்டர் கிருபானந்தகுமரனின் கட்டுரையும் கோழிவளர்க்கும் எம்மைப் போன்றவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு கட்டுரையாகும்.

**திருச்செல்வி சிவராசா - மன்னார்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட
* ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட

சந்தாத் தொகையை Green media House (Pvt) Ltd என்ற பெயரில், HNB Bank - Jaffna Metro branch - 016010023281 கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949

-----------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

பெயர் - ------------------------------------------------
முகவரி - ------------------------------------------------
தொலைபேசி இலக்கம் - ------------------------------------
சந்தாக் காலம் - ----------------------------------------
செலுத்திய தொகை - --------------------------------------
செலுத்திய திகதி - --------------------------------------



# தங்க நகை விலை

**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,66,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,81,950 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** செயற்கை நுண்ணறிவுத் துறையை வளர்ப்பது தொடர்பில் ஆராய்வதற்காக குழு ஒன்றை ஜனாதிபதி அமைத திருக்கின்றார். இன்றைய பொருளாதார நிலையில் இவையெல்லாம் தேவையா?

பி.விதுரன், - நல்லூர், யாழ்ப்பாணம்.

**பதில் -** நாளைய உலகின் அன்றாட செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) முக்கியபங்கு வகிக்கப் போகிறது என்பது பெரும்பாலான அறிவியலாளர்களின் கணிப்பு. அதனை உறுதிப்படுத்தும் வகையில் பல உலக நாடுகள் அந்தத் துறையில் போட்டி போட்டுக்கொண்டு முதலீடுகளை அதிகரித்து வருகின்றன.

கல்வி, நீதித் துறை எனச் செயற்கை நுண்ணறிவு துறையின் கரங்கள் பரந்து விரிந்து வருகின்றன. ஸ்டான்போர்டு ஆர்டிபிஷியல் இண்டெலிஜென்ஸ் இன்டெக்ஸ் அறிக்கை 2023-ன்படி அந்தத் துறையில் முதலீடு மேற்கொள்வதில் அமெரிக்காவின் பங்குதான் அதிகமாக உள்ளது.

இந்தப் போட்டியில் நாமும் இறங்காவிட்டால் உலகம் எம்மை முந்திச் சென்று விடும் என்ற நிலையில்தான், ஜனாதிபதி இது தொடர்பில் சில நகர்வுகளை முன்னெடுத்திருக்கின்றார்.

நாட்டில் செயற்கை நுண்ணறிவு பாவனையை ஊக்குவிப்பதற்காக துறைசார் நிபுணர்கள் அடங்கிய ஜனாதிபதி செயலணியொன்றை பெயரிட்டு அவர்களின் விபரங்களை சமர்ப்பிக்குமாறும், அது தொடர்பான கோட்பாட்டு ஆவணமொன்றை (Concept Paper) தயாரிக்குமாறும் தொழில்நுட்ப அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாயம், கல்வி, சுகாதாரம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் உள்ளிட்ட பல துறைகளில் மேலும் அபிவிருத்திக்காக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்து அதிகாரிகளின் கவனத்திற்கு ஜனாதிபதி கொண்டு வந்திருக்கிறார்.




தற்போது இலங்கையில் கணனி தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மூலம் மொத்த தேசிய வருமானத்தில் வருடாந்த பங்களிப்பு சுமார் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும், இதில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் மூலம் ஈட்டப்படும் வருமானம் எவ்வளவு என அறியப்படவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அந்தத் தொகையை கண்டறிவதற்கான முறைமை ஒன்றை தயாரிக்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

அடுத்த சில ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்படும் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியது அவசியமானது.

செயற்கை நுண்ணறிவுக்காக செய்யப்படும் முதலீடு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்காக செய்யப்படும் ஒரு முதலீடாகவே கருதப்பட வேண்டும்!

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com



# வடக்கின் சந்தை நிலைவரம்

| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 180/= |
| பச்சைமிளகாய் | - 100/= |
| தக்காளி | - 350/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 240/= |
| கரட் | - 160/= |
| பூசணி | - 60/= |
| புடோல் | - 120/= |
| வாழைக்காய் | - 80/= |
| சின்ன வெங்காயம் | - 350/= |
| பெரிய வெங்காயம் | - 130/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டக்காய் | - 120/= |
| கருணைக்கிழங்கு | - 180/= |
| பயற்றங்காய் | - 800/= |
| லீக்ஸ் | - 280/= |
| பீற்றூட் | - 200/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 800/= |
| போஞ்சி | - 450/= |
| கத்தரி - தம்புள்ள | - 160/= |



# நாணய மாற்று வீதம்

**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 209/= |
| கனடா டொலர் - | 230/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 340/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர்டொலர் - | 233/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 310/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 221/= |
| கனடா டொலர் - | 244/= |
| சீன யுவான் - | 47/= |
| யுரோ - | 358/= |
| ஜப்பான் யென் - | 2.4/= |
| சிங்கப்பூர் டொலர் | 246/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 411/= |
| சுவிஸ் பிராங் - | 367/= |
| அமெரிக்க டொலர் - | 324/= |



# ஏற்றுமதியாகும் உணவும் பானங்களும்

உலகளாவிய நுகர்வோர் மத்தியில் ஆரோக்கியமான, சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் சைவ உணவு முறைகள (vegan) பற்றிய அவதானமும் விழிப்புணர்வும் அதிகமாக பரவி வருவதோடு, இலங்கையின் பதப்படுத்தப்பட்ட உணவு உற்பத்தியாளர்கள் புதுமையான உணவு பதப்படுத்தும் முறைகளுடன் அதிக ஊட்டச்சத்துள்ள பாரம்பரிய உள்ளூர் மூலப்பொருள்களுடன் இணைத்து, சுவை மற்றும் நற்குணங்கள் கொண்ட உணவு மற்றும் பானங்களைத் தயாரிக்கின்றனர்.

சர்க்கரை, உப்பு மற்றும் கொழுப்பு அதிகம் உள்ள வழக்கமான பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்குப் பதிலாக, இலங்கையின் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள் முக்கியமாக இயற்கையான பழங்கள், காய்கறிகள் மற்றும் அரிசி மற்றும் தினை போன்ற தானியங்களுக்கு உலக சந்தையில் கேள்வி உள்ளது. அவை இயற்கையாகவே குளுட்டன்/பசையம் இல்லாதவை,

குளுட்டன் பற்றி உலகளாவிய ரீதியில் அதிகம் அக்கறை கொள்ளப்படுகிறது. குளுட்டன் என்னும் பொருள் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது. இந்த ஒவ்வாமையானது வாய் அல்லது தொண்டை வீக்கம், தொண்டை எரிச்சல்,படை நோய், அரிப்பு சொறி அல்லது தோல் வீக்கம், மூக்கடைப்பு,தலைவலி,சுவாசிப்பதில் சிரமம், பிடிப்புக்கள், குமட்டல் அல்லது வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.

இலங்கையின் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும்பானங்கள் துறையானது தேங்காய், காய்கறிகள் மற்றும் பழங்கள் சார்ந்த பொருட்கள், பழச்சாறுகள், அரைச்சமையல் உணவு, தின்பண்டங்கள் மற்றும் பேக்கரி பொருட்கள், தானியங்கள், மாவு தயாரிப்புக்கள், பரிமாற தயாராக உள்ள உணவு,

> **இலங்கைக்கே உரித்தான உயர்தரம், சுவை மற்றும் சுவை கொண்ட பெரிய அளவிலான பழங்கள் மற்றும் காய்கறிகள், இலங்கையின் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானத் தொழிலுக்கான அடிப்படை மூலப் பொருளாக அமைகின்றன.**

பானங்கள், கால்நடைத் தீவனம் உள்ளிட்ட பல்வேறு வகையான தயாரிப்புக்களை உள்ளடக்கியது.

பல தசாப்தங்களுக்கு முன்னர், இலங்கை ஏற்றுமதிகள் விவசாய உற்பத்திகளை மட்டுமே மையமாகக் கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து, உலகப் போக்குகள் சுகாதார உணர்வுள்ள நுகர்வோரை நோக்கி நகர்வதால், ஏற்றுமதியில் தற்போது பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட, சுற்றுச்சூழலுக்கு உகந்த, சர்க்கரை இல்லாத மற்றும் குறைந்த உப்பு சேர்க்கப்பட்ட பொருட்கள் உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் மீதான கவனம் அதிகம் உருவாகியுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளாக நிலையான முறையில் இயங்கி வரும் விவசாயம், இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலும், பல்லுயிர் மற்றும் இயற்கை நிலப் பரப்பின் ஆதரவிலும் மேம்பாட்டிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இலங்கையின் விவசாய நடைமுறைகள், விவசாய கைத்தொழில்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் இந்த உலகளாவிய சந்தை கேள்விகளை நிரப்புவதற்கு அல்லது பூர்த்தி செய்ய தங்கள் தயாரிப்பு வரம்பை விரிவுபடுத்தி வருகின்றன .

தயாரிப்புகள் செயலாக்கம், பொதியிடல் மற்றும் பசுமை உற்பத்தியில் உலகளாவிய தரத் தரங்களை பூர்த்தி செய்யவும் முயற்சிகளை எடுத்து வருகின்றன. சில நிறுவனங்கள் வெற்றியும் கண்டுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையின் உணவு மற்றும் பானங்கள் ஏற்றுமதி மதிப்புகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கை உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் சப்ளையர்கள் பதப்படுத்தப்பட்ட பழங்கள், காய்கறிகள் மற்றும் பழச்சாறுகள், தின்பண்டங்கள் மற்றும் பேக்கரி பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவு, அரிசி மற்றும் தானியங்கள், கால்நடை தீவனங்கள் மற்றும் அரைக்கும் தொழிலின் எச்சங்களை வழங்குகிறார்கள், அதே நேரத்தில் இலங்கை பான உற்பத்தியாளர்கள் மற்றும் சப்ளையர்கள் (தேயிலை தவிர) பாட்டில் குடிநீர் மது பானங்கள் மற்றும் மினரல் வாட்டரை ஏற்றுமதி செய்கிறார்கள்.

இலங்கையானது மிதமான, வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டலத்திற்கு பல காலநிலை மாறுபாடுகளைக் கொண்ட விளை நிலங்களைக் கொண்டுள்ளது, இலாபகரமான விவசாய தொழில்துறை பொருளாதாரத்திற்கான இயற்கையாக நிகழும் வளங்களைக் கொண்டுள்ளது.

பரந்த மற்றும் மாறுபட்ட காலநிலை மாறுபாடுகளைக் கொண்ட விளை நிலங்கள் மூலம் பழங்கள் மற்றும் காய்கறிகள் அதன் நிலங்களில் செழித்து வளர்கின்றன.

இலங்கைக்கே உரித்தான உயர்தரம், சுவை மற்றும் சுவை கொண்ட பெரிய அளவிலான பழங்கள் மற்றும் காய்கறிகள், இலங்கையின் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானத் தொழிலுக்கான அடிப்படை மூலப்பொருளாக அமைகின்றன.

www.agricultureinformation.lk

## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

--------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

--------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

--------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

--------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

--------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

--------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப்பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு - 077 6566508.

--------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து





செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

--------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

--------------------------------------



### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

--------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

--------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

--------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

--------------------------------------

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள மருதனார்மடம், இணுவில், சுதுமலை, உரும்பிராய், உடுவில், கோண்டாவில் ஆகிய ஏதேனும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு - 071-0368973/ 075-4974782

--------------------------------------



### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

--------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. -



# இலஞ்சம் இல்லாத இலங்கை



கடந்த வாரத் தொடர்ச்சி..

**புகாரளிப்பவர்கள் பாதுகாப்பு:**

இலஞ்சம் மற்றும் ஊழலை அம்பலப் படுத்துவதில் புகாரளிப்பவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அரசாங்கங்களும் தனியார் நிறுவனங்களும் தகவல் வெளியிடுபவர்களைப் பாதுகாப்பதற்கும், தகவல்களைத் தெரிவிக்க முன்வருவதற்கு அவர்களைத் தூண்டுவதற்கும் கொள்கைகளை வைத்திருக்க வேண்டும்.

**4. வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல்:**

ஊழலைத் தடுக்க நிறுவனங்கள் நிதிப் பரிவர்த்தனைகள் உட்பட, அவற்றின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கலாம். இது அவர்களின் வலைத்தளங்களில் தகவல்களைப் பகிரங்கப் படுத்துதல், வழக்கமான தணிக்கைகளை நடத்துதல் மற்றும் திறந்த புத்தக மேலாண்மை நடைமுறைகளை மேற்கொள்வது ஆகியவை அடங்கும்.

**5. இலஞ்ச எதிர்ப்புப் பயிற்சியை வலுப்படுத்துதல்:**

நிறுவனங்கள் தங்கள் ஊழியர்கள் மற்றும் பல்வேறு துறைசார்ந்தவர்களுக்கு இலஞ்ச ஒழிப்புப் பயிற்சியை வழங்கலாம், நெறிமுறை நடத்தையின் முக்கியத்துவத்தையும் ஊழலின் விளைவுகளையும் வலியுறுத்துகின்றன. இத்தகைய பயிற்சி ஒருமைப்பாடு கலாச்சாரத்தை உருவாக்கவும், இலஞ்சத்தில் ஈடுபடும் நபர்களைத் தடுக்கவும் உதவும்.

**6. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்:**

வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும், இலஞ்சம் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான பரிவர்த்தனைகளை உருவாக்க பிளாக்செயின் தொழில்நுட்பம் (Block chain) பயன்படுத்தப்படலாம், மேலும் சந்தேகத்திற்குரிய வடிவங்கள் மற்றும் நடத்தைகளை அடையாளம் காண தரவு பகுப்பாய்வு பயன்படுத்தப்படலாம்.

> **இவை இலஞ்சத்தை ஒழிப்பதற்கான சில சாத்தியமான உத்திகள். இந்த நடவடிக்கைகள் முழுமையானவை அல்ல, ஆனால் இவை இலஞ்சத்திற்கு எதிரான போராட்டத்தில் ஒரு நல்ல தொடக்க புள்ளிகளாகும்**

**7. நிறுவனங்களினை வலுப்படுத்துதல்:**

நீதித்துறை, சிவில் சேவை மற்றும் சட்ட அமுலாக்கம் போன்ற வலுவான மற்றும் சுதந்திரமான நிறுவனங்கள் இலஞ்சத்திற்கு எதிரான போராட்டத்திற்கு இன்றியமையாதவை. இலஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளை விசாரிக்கவும், வழக்குத் தொடரவும் இந்த நிறுவனங்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் திறனை வளர்ப்பதில் அரசாங்கங்கள் முதலீடு செய்ய வேண்டும்.

**8. பொது விழிப்புணர்வை ஊக்குவித்தல்:**

அரசாங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் சமூகத்தில் இலஞ்சத்தின் எதிர்மறையான தாக்கத்தைப் பற்றிய பொது விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்ய முடியும். இது அதிக நெறிமுறை நடத்தைக்கான கோரிக்கையை உருவாக்கவும், இலஞ்சத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும் உதவும்.

**9. சர்வதேச ஒத்துழைப்பு:**

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவை சர்வதேச ஒத்துழைப்பு தேவைப்படும் உலகளாவிய பிரச்சினைகளாகும். லஞ்சத்திற்கு எதிரான போராட்டத்தில் தகவல், வளங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ள அரசாங்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மேலும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள், எல்லைகளுக்கு அப்பால் இலஞ்ச எதிர்ப்பு முயற்சிகளை ஊக்குவிக்க வேலை செய்யலாம். எல்லை தாண்டிய இலஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளை விசாரிக்கவும், வழக்குத் தொடரவும் நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட முடியும்.

இவை இலஞ்சத்தை ஒழிப்பதற்கான சில சாத்தியமான உத்திகள். இந்த நடவடிக்கைகள் முழுமையானவை அல்ல, ஆனால் இவை இலஞ்சத்திற்கு எதிரான போராட்டத்தில் ஒரு நல்ல தொடக்கப் புள்ளியாகும். இலஞ்சம் இல்லாத சமூகத்தை அடைய அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் நேரம், முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு தேவைப்படும் இறுதியில், இலஞ்சத்தை ஒழிப்பதற்கு, ஒருமைப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அரசாங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து ஒரு தொடர்ச்சியான முயற்சி தேவைப்படும்.




AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்றால் என்ன?

* உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு **(DDR)**
* "நிதி நெருக்கடியை நாடு அனுபவிக்கிறது" என்பதன் பொருள் என்ன?
* "தனது கடன் கடமைகளை **(Debt Obligations)** நாடு நிறைவேற்ற முடியவில்லை" என்பதன் பொருள் என்ன?
* மறுசீரமைப்புச் செயன்முறை
* ஏன் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒரு சிக்கலான மற்றும் கடினமான செயல்முறையாக இருக்கிறது?
* உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் அரசியல் தாக்கங்கள் **(Political implications of DDR)**
* உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின்போது அரசாங்கம் செயல்படுத்த விரும்பாத சிக்கன நடவடிக்கைகள் எவை?

*** உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு** என் பது வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் ஓய்வூதிய நிதிகள் போன்ற அதன் சொந்த உள்நாட்டு கடன் வழங்குநர்களுடன் ஒரு நாட்டின் கடன் கடமைகளின் (debt obligations) விதிமுறைகளை மறுபரிசீலனை செய்யும் செயன்முறையைக் குறிக்கிறது. ஒரு நாடு நிதி நெருக்கடியை அனுபவிக்கும் போது மற்றும் அதன் கடன் கடமைகளை பூர்த்தி செய்ய முடியாத போது பொதுவாக இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செய்யப்படுகிறது.

*** 'நிதி நெருக்கடியை நாடு அனுபவிக்கிறது' என்பதன் பொருள் என்ன?**

ஒரு நாடு நிதி நெருக்கடியை சந்திக்கும் போது அந்த நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமின்மை மற்றும் கடினமான நிலையில் காணப்படும். அதிக அளவு கடன், பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், பண மதிப்பிழப்பு, அந்நிய முதலீடு குறைவு போன்ற பல்வேறு காரணிகளால் இது ஏற்படலாம்.

நிதி நெருக்கடியானது பொருளாதார வளர்ச்சியில் சரிவு, குடிமக்களின் வாழ்க்கைத் தரம் குறைதல் மற்றும் கடனைச் செலுத்துவதில் உள்ள சிரமங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். இது சமூக மற்றும் அரசியல் அமைதியின்மைக்கு வழிவகுக்கும். ஏனெனில் மக்கள் தங்கள் பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அவற்றை மேம்படுத்த அரசாங்கத்தால் இயலாமையால் விரக்தியடைவார்கள்.


சிக்கன நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், IMF போன்ற சர்வதேச அமைப்புக்களிடம் இருந்து நிதி உதவி பெறுதல் அல்லது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கான கட்டமைப்புச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் அரசாங்கங்கள் நிதி நெருக்கடிக்குப் பதிலளிக்க முடியும். இருப்பினும், மீட்புக்கான பாதை பெரும்பாலும் நீண்டதாகவும் சவாலாகவும் இருக்கும்.

*** 'தனது கடன் கடமைகளை** (debt obligations) **நாடு நிறைவேற்ற முடியவில்லை' என்பதன் பொருள் என்ன?**

ஒரு நாடு தனது கடன் கடமைகளை (debt obligations) நிறைவேற்ற முடியாமல் போனால் அதன் கடனாளிகளிடமிருந்து வாங்கிய பணத்தை மீண்டும் செலுத்த முடியவில்லை என்று கருதப்படும். ஒரு நாடு கணிசமான அளவு கடனைக் குவித்து போதுமான வருவாயை உருவாக்கவோ அல்லது அதன் கடனைச் செலுத்துவதற்கு போதுமான கடன்களைப் பெறவோ முடியாதபோது இது நிகழலாம்.

ஒரு நாடு கடன் கடமைகளை (debt obligations) நிறைவேற்ற முடியாத போது அது அதன் கடனைத் மீண்டும் செலுத்தாமல் இருக்கலாம். இது நாட்டின் பொருளாதாரம் மற்றும் அதன் கடன் வழங்குநர்களுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். கடன்களை மீண்டும் செலுத்தாதது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை இழக்க வழிவகுக்கும். இதனால் எதிர்காலத்தில் கடன் வாங்குவது மிகவும் கடினமாக இருக்கும்.

சில சந்தர்ப்பங்களில் ஒரு நாடு தனது




கடனை மறுகட்டமைப்பு செய்ய அதன் கடனாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம். இவற்றுள் மீண்டும் செலுத்தும் காலத்தை நீடிப்பது அல்லது வட்டி விகிதத்தைக் குறைப்பது ஆகியவை அடங்கும். எவ்வாறாயினும் ஒரு நாட்டின் கடன் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டால் அது சர்வதேச நாணய நிதியம் அல்லது பிற நாடுகளின் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வெளிப்புற உதவியை நாட வேண்டியிருக்கும்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் குறிக்கோள் நாட்டின் கடன் பொறுப்புகளின் சுமையை எளிதாக்குவது மற்றும் நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதி அமைப்புக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கடனைத் தவிர்ப்பது ஆகும்.

*** மறுசீரமைப்புச் செயன்முறை**

- கடனின் முதிர்வுக் காலத்தை நீடித்தல்
- வட்டி விகிதத்தைக் குறைத்தல் (Coupon Cut)
- அசல் / முதன்மைத் தொகையைக் குறைத்தல் (hair cut)

பொதுவாக, மறுசீரமைப்புச் செயன்முறையானது கடன் வாங்குபவர் மற்றும் கடன் வழங்குபவர்களிடையே கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்வதைக் குறிக்கிறது.

**கடனின் முதிர்வுக் காலத்தை நீடிப்பது, வட்டி விகிதத்தைக் குறைப்பது அல்லது அசல் தொகையைக் குறைப்பது போன்ற மறுசீரமைப்புச் செயன்முறைகளின் விளக்கம்.**

1. **கடனின் முதிர்வுக் காலத்தை நீடிப்பது** மீண்டும் செலுத்தும் காலத்தை நீடிப்பதைக் குறிக்கின்றது. இது வழக்கமான கட்டணத் தொகையைக் குறைத்து கடனாளிக்கு கடனை மீண்டும் செலுத்துவதற்கு அதிக நேரத்தை வழங்கும். இது கடன் வாங்கியவர் நிதிச் சிக்கல்களைச் சந்திக்கும் போது அல்லது அசலை மீண்டும் செலுத்தும் அட்டவணை இனி சாத்தியமில்லாத போது உதவியாக இருக்கும்.

**2. வட்டி விகிதத்தைக் குறைப்பது** கடன் வாங்குபவருக்கு கடனை மிகவும் மலிவாக மாற்றும். ஏனெனில் இது அசல் நிலுவைத் தொகையில் சேரும் வட்டியின் அளவைக் குறைக்கும். அசல் கடன் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதிலிருந்து வட்டி விகிதங்கள் குறையும் போது இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் கூப்பன் வெட்டு என்றால் என்ன? (What is Coupon Cut in DDR?)**

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் கூப்பன் வெட்டு என்பது வட்டி விகிதத்தில் குறைப்பு அல்லது பத்திரதாரர்கள் தங்கள் கடன் பத்திரங்களில் பெறும் கூப்பன் கட்டணத்தைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் மீதான கடன் சுமையைக் குறைக்கப் பயன்படுத்தப்படும் சாத்தியமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

ஒரு நாட்டின் கடன் தாங்க முடியாததாக மாறும் போது, அதாவது அதிகப்படியான பொருளாதாரக் கஷ்டங்களைத் திணிக்காமல் திருப்பிச் செலுத்த முடியாது கடனை மறுகட்டமைப்பு செய்ய அரசாங்கம் அதன் கடனாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம். இது கடனின் முதிர்வுக் காலத்தை நீடிப்பது, கடனின் அசல் தொகையை குறைப்பது அல்லது கடனுக்கான வட்டி விகிதத்தை குறைப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை உள்ளடக்கியிருக்கலாம். கூப்பன் வெட்டு என்பது வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கும் கடனாளியின் கடனை மேலும் சமாளிக்கக்கூடியதாக மாற்றுவதற்கும் வழிவகுக்கின்றது.

கூப்பன் வெட்டு என்பது பொதுவாக பத்திரதாரர்கள் தங்கள் பத்திரங்களில் பெறும் வட்டி விகிதத்தைக் குறைப்பதைக் குறிக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு பத்திரம் 5% கூப்பன் வீதத்தைக் கொண்டிருந்தால் கூப்பன் வெட்டு விகிதத்தை 2% அல்லது 3% ஆகக் குறைக்கலாம். இதன்மூலம் பத்திரதாரர்கள் தங்கள் முதலீட்டில் இருந்து குறைவான வருமானத்தைப் பெறுவார்கள். ஆனால் இது கடனாளியின் கடனை மிகவும் மலிவாக மாற்றும்.

கூப்பன் வெட்டுக்கள் பெரும்பாலும் கடன் மறுசீரமைப்புகளில் சர்ச்சைக்குரிய பிரச்சினையாகும். ஏனெனில், பத்திரதாரர்கள் தங்கள் வருமானம் குறைக்கப்படுவதை எதிர்க்கலாம். இருப்பினும், கடனாளி நாட்டிற்கான நிலையான கடன் அளவை அடைய அவை அவசியமாக இருக்கலாம்.

**3. முதன்மைத் தொகையைக் குறைப்பது** என்பது கடனாளியின் மொத்தக் கடனைக் குறைப்பதாகும். இது முதிர்வுக் காலத்தை நீடிப்பது அல்லது வட்டி விகிதத்தைக் குறைப்பதை விட கடுமையான நடவடிக்கையாக இருக்கலாம். ஆனால் கடன் வாங்கியவர் குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடியை எதிர்கொண்டு செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் யதார்த்தமாக திருப்பிச் செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் இது அவசியமாக இருக்கலாம்.

**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் முதன்மைத் தொகைக் குறைப்பு என்றால் என்ன? (What is Hair Cut in DDR?)**

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் பின்னணியில் "ஹேர்கட் / Hair Cut" என்பது ஒரு கடனாளி தனது கடனாளிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள கடனின் மதிப்பைக் குறைப்பதைக் குறிக்கிறது. இந்த மதிப்புக் குறைப்பு பொதுவாகக் கொடுக்கப்பட்ட அசல் தொகையின் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் கடனளிப்பவர்களுக்கு இழப்பை விளைவிக்கின்றது.

**கடன் மதிப்புக் குறைப்பு** ("ஹேர்கட்") என்பது கடன் மறுசீரமைப்பிற்கு அவசியமான ஒரு அங்கமாகும். குறிப்பாக கடன் வாங்கியவர் தனது கடன் கடமைகளை நிறைவேற்ற முடியாத மற்றும் தற்போதுள்ள கடன்சுமையை தாங்க முடியாதவராக இருக்கும் போது நிலுவையில் உள்ள கடனைக் குறைப்பதன் மூலம் கடனாளியின் கடன் சுமையை மேலும் சமாளிக்கக்கூடியதாகவும் நிலையானதாகவும் மாற்றுவதற்குக் கடன் மதிப்புக் குறைப்பு ("ஹேர்கட்") உதவும்.

(18 ஆம் பக்கம் பார்க்க)



- தமிழ்க்கவி -

## எங்கள் வாழ்வும் வளமும்

# வேலியைச்சுற்றி ...

சில பயிர்களுக்கு வேலி போடுவோம். சில பயிர்கள் வேலியாகவே நிற்கும். பயிர்களுக்கு வேலி பாதுகாப்பு என்றாலும் அந்த வேலியையும் பயனுள்ளதாக அமைத்தது ஒரு காலம்.

வேலிகளுக்கென்றே தனிச் சட்டங்கள் இருக்கின்றன. ஒருவருக்கு எந்தெந்த வேலி சொந்தமானது. அதில் பக்கத்து காணிக்காரருக்கு எந்த அளவுக்கு உரிமை இருக்கிறது. அதில் அவர் என்ன வகையான மரங்களை நடலாம். என்ற விதிகளை தேசவழமைச் சட்டத்தில் படித்திருக்கிறேன். எல்லை வேலியிலிருந்து நாலடிக்கு அப்பால்தான் ஒரு வான்பயிரை நடலாம் என்பதும், வேலி யாருக்கு சொந்தமோ அவர் வேலியில் வைக்கும் பயிருக்கும் அவரே சொந்தக்காரர் ஆவார். அவரது கிளைகளால் பக்கத்து காணிக்காரர் தொந்தரவை அனுபவித்தால் அதை நீதிமன்ற அனுமதி பெற்றே வெட்டலாம். பக்கத்து வீட்டு மாமரம் எங்கள் வளவுக்குள் காய்த்து தொங்கினாலும் அது நமக்கு சொந்தமில்லை. என்பது போன்ற அடாமுடாங்கான சட்டங்களை இந்தச் தேசவழமைச் சட்டத்தில் படித்திருக்கிறேன்.

நமக்கேன் வம்பு நாங்கள் நமது வேலியைச்சுற்றி ஒருதடவை பார்த்து விடலாம். நான் இன்னும் இயற்கை வேலியைத்தான் வைத்திருக்கிறேன். அங்கே கோடையில் காணாமற் போகும் பல தாவரங்கள் மாரியில் தாமாகவே வெளியே வரும். அப்படி வருபவற்றில் தூதுவளை, மொசு மொசுக்கை, குன்றிமணி, கொவ்வை, பீாக்கு, பேய்ப்புடல், உத்தமாகாணி சங்குப் புஸ்பம். முடக்கத்தான் என்பவை அடங்கும் கோடையிலும் குறையாமல் நிற்பவை துத்தி, தும்பை, வட்டு. சுண்டங்காய், செம் பருத்தி முருங்கை என்பன அடங்கும். இவை தவிர பூவரசு கிளிசிடியா முள் முருக்கு கிழுவை என்பனவும் எப்போதும் நிற்பவை மட்டுமல்ல தேவையான பொழுது எமக்குத் தேவையான தடிகளையும், வருடாந்த கழிப்பின் மூலம் விறகுத் தேவைக்குத் தந்து உதவுகின்றன.



இப்போதுள்ள காணிகளில் மதில் கட்டுவது ஒரு நாகரீகமானதாகவும், பாதுகாப்பானதாகவும் கருதப்படுகின்றது, ஆனால் அண்மையில் மதில் கட்டிய வீடொன்றில் கொள்ளையர்கள் புகுந்து விட்டனர். அங்கே பெரிதாக அலறல் சத்தமும் கேட்டது. ஆனால் அயலவர் தத்தம் வீடுகளுக்குள் நின்று அந்தப்பக்கத்தை பரிதாபமாக பார்த்தார்களே அல்லாமல் யாரும் உள்ளே செல்லவில்லை. காரணம், அந்த வீட்டுக்காரர்கள் வழமையாக மாலை ஆறுமணிக்குப்பின் யாரையும் தமது வளவுக்குள் அனுமதித்ததில்லையாம் என, அந்த மக்கள் விசாரணையில் கூறினார்கள். இன்றைய அயலவர்களுடனான உறவு இப்படித்தான் இருக்கிறது.

உலகம் உள்ளங்கைக்குள் வந்து விட்டது. ஆனால் உறவுகள் நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக மாறிவிட்டன. வேலி என்பது ஒரு கலையாக இருக்கிறது என்பதை யுத்தத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு ஒரு தடவையாவது சென்று வந்தவர்களைக் கேட்டால் தெரியும். இயக்கச்சி கடந்தபின் பேருந்துகளிலிருந்து

‘ உலகம் உள்ளங்கைக்குள் வந்துவிட்டது. ஆனால் உறவுகள் நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக மாறிவிட்டன. வேலி என்பது ஒரு கலையாக இருக்கிறது என்பதை யுத்தத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு ஒரு தடவையாவது சென்று வந்தவர்களைக் கேட்டால் தெரியும். இயக்கச்சி கடந்தபின் பேருந்துகளிலிருந்து வேலிகளின் அழகை அவற்றின் லாவண்யத்தை அவற்றின் அமைப்பிலிருக்கும் பொருள்களை வைத்து வியந்து பார்த்த காலம் அது. ’

வேலிகளின் அழகை அதன் இலாவண்யத்தை அதன் அமைப்பிலிருக்கும் பொருட்களை வைத்து வியந்து பார்த்த காலம் அது.

யாழ்ப்பாணத்து விவசாயி வண்டியில் கிடுகு ஏற்றிக்கட்டுவதும் தேங்காய் உரி மட்டைகளை ஏற்றி வருவதும் அவ்வளவு அழகாக இருக்கும். கோபுரம் போல அந்த வண்டிகள் தெருவில் செல்வது ஒரு தேரோட்டம் போலத் தெரியும். அவர்கள் கட்டும் வேலிமட்டும்?

அந்த அற்புதக் கலைஞர்களை இந்த சந்ததி தொலைத்து விட்டது என்றே கொள்ளலாம். வெறும் அலம்பல்களை வைத்தே அழகுான வேலிகளை படைத்தார்கள். கிடுகு பனையோலை வளர்க்கும் உய் கதிகால்களைக்கூட கலைப்படைப்பாக வளர்த்த வேலிகளை நாம் இப்போது காண்பது அருமையாக இருக்கிறது. காசு கட்டும் வேலியைவிட கைகால் உழைப்பில் நிமிரும் வேலிகளே பயன் தருவதாகும்.

இந்த வேலிகளை மட்டும் நம்பியே ஒவ்வொரு வீட்டிலும் ஆடு வளர்ப்பார்கள். படிப்படியாக வேலிக்குழைகளை வெட்டிப் போட்டும் வீட்டின் சமையல் கழிவுகளை உண்டு கொண்டும் ஆடுகள் வளரும். எத்தனை விடயங்களை மதில்கள் கொன்று புதைத்து விட்டன. மதிலருகே குடியிருந்தாலும் அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள எங்காவது வெளியேதான் வரவேண்டும். அங்கேயும் அவர்களால் நின்று பேசி உறவை வளர்க்க முடிவதில்லை. உறவுகளை விட்டு பணத்தையும் பொருளையும் மட்டுமே உயர்வாக கொண்டு வாழும் சமூகம் வேறு எப்படி வாழ முடியும்

வேலிகளை சுற்றி எமது அன்றாட உணவுக்கான காய்கள் கீரை வகைகள் மட்டுமல்ல மூலிகைகள் என ஏராளமாக உற்பத்தி செய்தவர்கள் நாம், அதை வெறும் கல்லுக்கட்டடமாக மாற்றிவிட்டு ஆரோக்கியத்தை சந்தைகளில் தேடுகிறோம். சற்றே உணவு பிசகிவிட்டது காலையிலிருந்து வயிற்றோட்டம். என்றால் அம்மா வேலியில் சென்று முருங்கைப் பட்டை கொண்டுவந்து மிளகு சேர்த்து இரசம்வைத்து தருவாள். அதுவே மருந்து. மழையில் நனைந்து விட்டேன். லேசான சளி. கொஞ்சம் பொறு என்றுவிட்டு தூதுவளையைக் கொண்டுவந்து ஒரு துவையல் செய்வாள். கடுமையான உதிரப்போக்கானால், உத்தமாகாணி, வந்துவிடும், உடலில் கட்டிகள் தோன்றினால் நமைச்சல் ஏற்பட்டால் குன்றிமணி, கைகால் சுழுக்கு வலி என்றால் பிரண்டை வந்து விடும். எப்படிப்பட்ட வாழ்க்கை எங்களுடையது.

வேலிகளின் ஊடாக பக்கத்து வீடுகளின் உறவுகள் இருக்கும. யார் வீட்டுக்கு விருந்து வந்திருக்கிறது. எந்தவீட்டில் பிள்ளைக்கு கல்யாணம் நிச்சமாகியிருக்கிறது. எவர் வீட்டில் குடும்பச்சண்டை மோசமாகி வருகிறது என்ற செய்தி முதல் பாகிஸ்தானிலிருந்து வெங்காயம் வருகின்றதாம். உலகக் கோப்பை விளையாட்டு தொடங்குதாம். என்பன போன்ற அனைத்து செய்திகளையும் இங்கேதான் பரிமாறிக் கொள்வர்பெண்கள். வானொலி இல்லாமலே உலகச் செய்திகளை ஒருவருக்கொருவர் பரிமாறிய செய்தி அலைகள் இந்த வேலிகள் தானே நாங்கள் விளையாட்டாக வைக்கும் வேலிப் பொட்டுகளை தகவல் ஒலிபரப்புமையமும் தகவல் சேகரிப்புமையமுமாக நடைமுறைப்படுத்துவோம். இன்றைக்கு அந்த மகிழ்ச்சி எங்கே தொலைந்து போயிற்று.

அடுத்த வீட்டில் கொதிக்கும் குழம்பின் வாசம் மட்டுமல்ல குழம்பும் எமது குசினிக்கு வரும். இங்கே செய்யும் பலகாரம் அடுத்த இரண்டு வீடுகளுக்கும் சேர்த்தே செய்யும் வழக்கம் எம்முடையது. வீட்டில் ஒருவர் படுத்துவிட்டால் வீடே நிறைந்து ஆறுதளிக்கும் உறவுகள் அயலார்தானே. அந்த அயலார் என்ற உறவுகளை கட்டிக் காத்து வைத்திருந்தது இந்த வேலிகள் தானே. எத்தனை காதல்கள் வேலிப் பொட்டுகளில் உருவாகி விருட்சமாகியது. வேலிகளால் பாய்ந்த ஜோடிகள், இன்றும் இதைப்பற்றி தமது பேரன் பேர்த்திகளுடன் பேசிக் கொண்டிருக்கும் முதியவர்களை கேட்டுப்பாருங்கள்.

மதிலைக்கட்டிப்போட்டால் எல்லைப் பிரச்சினை வராது. என்பவர்கள் எத்தனை மதில்கள் இடிந்து தூர்ந்து போய்விட்டன என்பதை அறிய மாட்டார்களா. தளைக்கும் கதிகால்களை நட்டு வளர்த்த வேலிகள் அதன் வயதை சொல்லும் என்பதை எத்தனை வழக்குகள் நிரூபித்துள்ளன, மரங்களை வளர்ப்போம் என்ற மாபெரும் செயலுக்கு நாம் வேலிகளை பயன்படுத்தினால் அது இரட்டைப்பலனைக் கொடுக்கும். ஒரு நிலத்தில் நாம் குடியேறும்வரை எத்தனை மரங்கள் உயிர் விட்டனவோ அதில் பாதியையாவது திருப்பி நடவில்லை என்றால் நாம் இந்த மண்ணுக்கு பட்ட கடன் தீர்க்கப்படாமலேயே போய்விடும். அது எமது சந்ததிக்கு நாம் செய்யும் துரோகமும் ஆகும்.







"ஆரம்பத்தில் இருந்தே ஏதோ ஒரு சுய தொழிலினைச் செய்ய வேண்டும் என்ற உந்துதல் எனக்குள் இருந்தது. அது என்ன என்பதை என்னால் திட்டமிட முடியவில்லை. ஆனால் அது வித்தியாசமானதாகவும் மிகச் சிறப்பானதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணினேன். அப்போது எனது சுய தேடலின் வழி கண்டுபிடித்தது தான் மண்ணில் இருந்து ஆபரணங்களை உருவாக்கும் இந்தத் தொழில்"

நேர்கண்டவர் - ஞா.கவினி

# மண்ணிலிருந்து ஆபரணங்களை உருவாக்கிச் சாதிக்கும் மாணவி!

## kiki தொழில் கூட நிறுவுனர் கிருசாந்த் நிதுசா

இலங்கையின் புராதான நிலங்களில் ஒன்றான வன்னி மண்ணின் முததையன் கட்டுப்பிரதேசத்தில் களிமண்ணினால் உபகரணங்களை மிக நேர்த்தியாக உருவாக்கி வெற்றி பெற்று வரும் kiki தொழில் கூட நிறுவுநர் திருமதி கிருசாந்த் நிதுஷாவை தமிழர் பொருண்மியம் செவ்வி கண்டது. இவர் பெரதெனியா பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு மாணவியுமாவார்.

**கேள்வி -** நீங்கள் இந்த துறையினை தெரிவு செய்வதன் நோக்கம் என்ன?

**பதில்-** ஆரம்பத்தில் இருந்தே ஏதோ ஒரு சுய தொழிலினை செய்ய வேண்டும் என்ற உந்துதல் எனக்குள் இருந்தது. அது என்ன என்பதை என்னால் திட்டமிட முடியவில்லை. ஆனால் அது வித்தியாசமானதாகவும் மிகச்சிறப்பானதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணினேன். அப்போது எனது சுய தேடலின் வழி கண்டுபிடித்தது தான் மண்ணில் இருந்து ஆபரணங்களை உருவாக்கும் இந்தத் தொழில்.

**கேள்வி -** பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவியாக இருந்து கொண்டு இந்தத்



தொழிலையும் முன்னெடுப்பது உங்களுக்கு சிரமமாக இல்லையா?

**பதில் -** இது நான் மிகவும் ரசித்து செய்யும் தொழில். பல்கலைக்கழக படிப்பென்பது சமூக அந்தஸ்திற்காகவும் பட்டத்துக்காகவும் மட்டுமானது. ஆனால், இந்தத் தொழில் எனது கனவு, எனது இலட்சியம். எனக்கு பிடித்தவை எதுவும் எப்போதும் பாரமாக இருக்காது. உண்மையில் சொல்லப்போனால் படிக்கின்ற மாணவர்களுக்கு தான் இது மிகவும் தேவையான ஒரு விடயம். மேலை நாடுகளைப் போல படிக்கும்போதே தமக்கான வருவாயையும் ஈட்டுவதற்கு நமது பிள்ளைகள் பழக்கப்படுத்தப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேலும் பெற்றோரை வருத்தி அவர்களில் தங்கி வாழும் மனோநிலையில் இருந்து எமது பிள்ளைகள் மாற வேண்டும்.

**கேள்வி -** நல்ல விடயம் தான் மாணவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இந்த தொழிலை அறிமுகப்படுத்துவது அல்லது பழக்குவிப்பது பற்றி ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறீர்களா?





**பதில் -** ஆம். நிச்சயமாக, தற்போது எனது பிரதேசத்தில் உள்ள சில பெண் பிள்ளைகளுக்கு இதனை அறிமுகப்படுத்தி பயிற்றுவித்தும் வருகின்றேன். தொடர்ந்தும் சகல மாவட்டங்களிலும் உள்ளவர்களுக்கு இந்த பயிற்சிநெறியை

வழங்க வேண்டும் என்று ஆர்வமாக இருக்கிறேன். மாணவர்களுக்கான தற்சார்பு சிந்தனையை உருவாக்கும் நோக்கில் ஏற்கனவே செயற்பட்டு கொண்டிருக்கும் புதிய வெளிச்சம் நிறுவனத்தோடு இணைந்து அதற்கான செயற்பாடுகள் இருக்கும் என்று நம்புகிறேன்.

**கேள்வி** - மண்ணிலிருந்து ஆபரணங்களை உருவாக்குவது என்பது அவ்வளவு இலகுவானது இல்லை என்று நினைக்கிறேன். ஒரு சவாலான விடயத்தை இன்றைக்கு நீங்கள் சாதித்து இருக்கிறீர்கள். இதற்கு உங்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் யாவர்?

**பதில்** - உண்மைதான். இது அவ்வளவு இலகுவானது அல்ல. மிகவும் நுணுக்கமாகவும் பொறுமையுடனும் அணுகினால் தான் நேர்த்தியான தரமான ஒரு பொருளை வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கலாம். சில வேளைகளில் ஒரு ஆபரணத்தை செய்வதற்கு ஏழு தொடக்கம் முப்பது வரையான நாட்கள் கூட தேவைப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த பொருள் விரும்பிய வடிவத்தில் நமது கைகளில் தவழும் போது அந்த களைப்புகள் எல்லாம் பறந்து விடுகின்றன. எனது இக்கட்டான நேரங்களில் எல்லாம் எனக்கு வழி





காட்டியாகவும் உதவியாகவும் இருப்பது எனது குடும்பத்தினர் தான். தங்கையும் என்னுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார். அப்பாவின் உறுதுணை என்னை இன்னும் முன்னோக்கிச் செல்ல வைக்கிறது.

**கேள்வி** - இந்த தொழில் பயிற்சியினை சரியான முறையில் நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில்** - சுய தேடல் தான் எல்லாம். ஆரம்பத்தில் YouTube சேனல்கள் மூலமாக கற்று வந்தேன். பின்பு இந்தியாவின் மும்பையில் உள்ள ஓர் ஆசிரியரிடம் இணையவழி பயிற்சியை பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி** - இதற்கான உபகரணங்களை நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்?

**பதில்** - என்னுடைய தொழிலுக்கான உபகரணங்கள் எல்லாவற்றையும் என்னுடைய தந்தை தான் தயார்ப்படுத்தி தருகிறார். அவர் நுணுக்கமாக செய்து தரும் அச்சுக்கள் ஒவ்வொன்றும் எனக்கு பலமான அத்திவாரத்தை தருகிறது.

**கேள்வி** - ஆபரணங்களை செய்வதற்கான மூலப்பொருளை நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொள்கின்றீர்கள்?

**பதில்** - எனது மூலப் பொருள் எனது ஊரின் எல்லைகளில் உள்ள பழம்பெரும் குளங்களில் இருந்து கிடைக்கிறது. இங்கே இதற்கு பொருத்தமானது என்று அடையாளப்படுத்தப்பட்ட மண்ணை பெற்றுக் கொள்கிறேன். இதற்கு எனது தந்தையும் தம்பியும் உறுதுணையாக இருக்கிறார்கள். எனது வேலைகளிலேயே மிகவும் கடினமான வேலையென்றால் சரியான மண்ணை கண்டுபிடித்து எடுப்பது என்று தான் சொல்லுவேன்.

**கேள்வி** - களிமண்ணால் செய்யப்படும் ஆபரணங்களுக்கு உத்தரவாதம் ஏதாவது இருக்கிறதா?

**பதில்** - இதுவரை யாருக்கும் நான் உத்தரவாதம் வழங்கியது இல்லை. ஆனால், குறித்த காலத்தில் எனது உற்பத்தி பொருட்கள் பழுதடைந்து விட்டதாகவோ உடைந்து விட்டதாகவோ யாரும் குறை சொன்னதும் இல்லை. எவ்வளவு பெறுமதியான பொருட்களை நாங்கள் வாங்கினாலும் நாம் அவற்றை பராமரிக்கும் வகையில் தான் அவற்றிற்கான உத்தரவாதம் தங்கி உள்ளது. உதாரணமாக 50 ரூபாய்க்கு விற்கப்படும் எனது காதணி தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேல் பாவிக்க கூடியது. களிமண்ணினால் உருவாக்கப்பட்ட ஆபரணங்கள் இன்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பின்பும் கண்டுபிடிக்கப்பட்டு புராதனப் பொக்கிஷங்களாக பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றால் அவை எத்துணை வலிமை உள்ளதாக இருக்கும் என்பது உங்களுக்கு புரிந்திருக்கும்.

**கேள்வி** - உங்களுடைய உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதில் உங்களுக்கு ஏற்படும் சவால்கள் என்ன?

**பதில்** - தற்காலத்து இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் எனது உற்பத்தி பொருட்களுக்கு மிகவும் பலத்த வரவேற்பு இருக்கிறது என்பது எனக்கு மகிழ்ச்சி.

காலத்திற்கு காலம் மாறுபடும் கற்பனைக்கேற்ப ரசனையுடன் கலைப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் தற்போது பலரும் ஆர்வம் காட்டுகிறார்கள். அதனால் என்னுடைய உற்பத்தி பொருளுக்கான சந்தை வாய்ப்பை பற்றி நான் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

**கேள்வி** - இந்த தொழிலை விரிவாக்குவது குறித்து ஏதேனும் கிட்டத்தை வைத்திருக்கிறீர்களா?

**பதில்** - ஆம். எனது உற்பத்தி பொருட்களுக்கான ஒரு காட்சி அறையினை அமைப்பதற்கு முயன்று கொண்டிருக்கிறேன். அதற்கான வேலைகள் நடைபெற்று வருகிறது. எனது கனவுத் தொழிற்சாலையின் திறப்பு விழாவிற்கான அழைப்பிதழை உங்களுக்கு அனுப்புகிறேன்.

**கேள்வி** - சமூகத்தில் மற்றும் உங்களுடைய குடும்பத்தில் இந்த தொழிலுக்கான ஆதரவு எப்படி இருக்கிறது?

**பதில்** - முதலில் இந்தத் தொழிலின் மீது எனக்கு ஆர்வம் இருந்தது. தற்போது எனது குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஆர்வமாக இருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக என்னுடைய குடும்பத்தினரும் என்னுடைய வாழ்க்கை துணையின் குடும்பத்தினரும் எப்போதும் புதிதாக சிந்திக்க தெரிந்தவர்கள். எனக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு தருபவர்கள். அதனால் நான் எனது தொழிலில் தொடர்ந்து பயணிக்கவும், வெற்றிகளை பெற்றுக் கொள்ளவும் பெரும் வாய்ப்பாக இருக்கிறது.

**கேள்வி** - சமூகத்தில் உங்களைப் போல சாதிக்க துடிக்கும் மற்றவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**பதில்** - உண்மையில் ஒவ்வொரு தனி மனிதனும் பிறரில் தங்கி வாழாத தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் இது ஒரு பிரச்சினையாக இருந்தாலும் உங்களுடைய சொந்த உழைப்பு உங்களுக்கு ஒரு தன்னம்பிக்கையையும் மனத்திடத்தையும் நிச்சயமாக தரும். நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் எதிர்காலத்தில் பலமான வெற்றிக்கு அத்திவாரமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

# குறைந்த செலவில் அதிக இலாபம் தரும் மர முந்திரிகைச் செய்கை



ஆனந்தன் பிரேம்நாத்
லக்சி பண்ணை

*மரமுந்திரிகையினை அதிகமானோர் வெள்ளை தங்கம் என்று கூறுகின்றார்கள். காரணம்: விதைகளிலே அதிக விலை கூடியதும் அதிகமானோரால் விரும்பி சுவைத்து உண்ணக்கூடியதும் என்பதற்காக*

பரவலாகப் பயிரிடப்படுகின்ற பயிர்களில் மர முந்திரிகை பயிர்செய்கையும் ஒன்று.

மரமுந்திரிகையினை அதிகமானோர் வெள்ளை தங்கம் என்று கூறுகின்றார்கள். காரணம் விதைகளிலே அதிக விலை கூடியதும் அதிகமானோரால் விரும்பி சுவைத்து உண்ணக்கூடியதும் என்பதற்காக.

குறைந்த செலவில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களில் மரமுந்திரிகை செய்கையும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

'கடும் வறட்சியை தாங்கும் முநதிரியைப் பயிரிட்டால், தொடர்ந்து 25 முதல் 30 ஆண்டுகளுக்கு, வருமானம் கிடைக்கும்.

பல நாடுகளில் தங்கள் அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்காக மர முந்திரிகையினை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றார்கள்.

சாதாரணமாக தற்பொழுது இலங்கை ரூபாயின் பெறுமதி அடிப்படையில் ஏக்கருக்கு, ஒரு போகத்தில் 10 லட்சம் ரூபாய் வரை இலாபம் ஈட்டலாம என்கிறார் ள் அனுபவம் உள்ள விவசாயிகள்.

25 - 30 ஆண்டுகள் வரை, நிலையான வருமானத்தை தரும். மேலும், கடும்வறட்சியை தாங்கி வளர்வதுடன், வடிகால் வசதியுடைய எல்லா வகை மண்ணிலும் இதை பயிரிடலாம். மணல் சார்ந்த மண சிறப்பாக இருக்கும். குறிப்பாக களிமண், கிறவல் மண்ணில் நடுகை செய்யக்கூடாது.

மரமுந்திரிகையைப் பொறுத்தவரை அதிக நீர் கட்டமைப்பு தேவைப்படாது.

மாறாக நிலத்தில் ஓரளவு ஈரப்பதம் இருந்தாலே போதுமானதாக இருக்கும்.

சாதாரணமாக ஏக்கருக்கு, 120 கன்றுகள் வரை நடுகை செய்யலாம்.

மரமுந்திரிகை ஆனதை ஜூன் - டிசம்பர் மாதங்களில் நடவு செய்யலாம். ஒட்டுக்கட்டிய மர முந்திரிகை கன்றுகளை தேர்வு செய்து நடுவது சிறந்தது. மாறாக விதைக்கன்றுகளை நடுகை செய்தால் காய்ப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

கட்டாயம் நடுகையின் போது கவனிக்க வேண்டியது. 45 செ.மீ., நீள, அகல, ஆழ அளவிற்கு குழிகள் தோண்டி, ஒவ்வொரு குழிக்கும் இயற்கை உரமான மக்கிய ஆட்டெரு அல்லது கோழி எரு அல்லது மாட்டு எரு 10 கிலோ வீதம் இட்டு நட வேண்டும்.

நடுகையின் போது நான்கு தொடக்கம்ஆறு மாதவயதுடைய மரமுந்திரிகை கன்றுகளை தேர்வு செய்து நட வேண்டும்.

குறைந்தது ஒவ்வொரு கன்றுகளுக்குமான இடைவழி 18 அடிக்கும் குறையாமல் இருக்க வேண்டும்.

சில பண்ணையாளர்கள் 20 அடி, 22 அடி இடைவெளியிலும் நடுகை செய்கின்றார்கள்.

மரமுந்திரிகையில், 'தண்டுத் துளைப்பான்' நோய் தாக்குதல் அதிகம் இருக்கும் என்பதால் சரியாக கவனிக்காமல் இருந்தால், அப்புழு தாக்கப்பட்ட மரங்களின் குருத்துப் பகுதி மற்றும் இலைகள் கருக ஆரம்பிக்கும் அதன் பிறகு படிப்படியாக ஒவ்வொரு இலைகளும் உதிர ஆரம்பிக்கும். உதிர்ந்து, மரம் மொட்டையாக காட்சியளிக்கும்.

## கட்டுப்படுத்தும் முறை

விவசாயிகள் எந்த ஒரு ஐயப்பாடும் இல்லாமல் இதனை கட்டுப்படுத்த முடியும்.

அதாவது ஆண்டிற்கு, இரு முறை, மழை காலத்தின் முன்பும், மழைக்காலத்திற்கு பின்பும். மரத்தின் அடித்தண்டில் அதாவது தரையிலிருந்து, 3 அடி வரை ஒரு லிட்டர் தாரில் சமமான அளவில் மண்ணெண்ணெய் கலந்த தார் கலவையை பூசினால், இப்பிரச்சினை தீரும்.

தார் இல்லாத பட்சத்தில் நன்கு பத்திய ஓயில் ஒரு லிட்டர் எடுத்து அதனுள் முப்பது கிராம் கற்பூரத்தினை நன்றாக பொடியாக்கி அதனுள் போட்டு நன்றாக சூடாக்கி பின்பு நன்றாக ஆற வைத்து அதனை மரத்தில் பூசினால் இப்பிரச்சினை முற்றாக தீரும்.

கன்றுகள் நட்ட, மூன்று ஆண்டுகளுக்குப் பின்பே, மர முந்திரிகை அறுவடை செய்ய முடியும். எனவே, இடைப்பட்ட காலத்தில் மண்ணின் வளத்திற்கு ஏற்ப பப்பாளி, சர்க்கரை வள்ளி, உளுந்து, பச்சை பயறு, கௌபி, நிலக்கடலை, எள் போன்றவற்றை, ஊடுபயிர் செய்து, கூடுதல்லாபம்பெறலாம்.

வறட்சியான இடமாக இருந்தால் வாரத்திற்கு ஒரு தடவை நீர் பாச்சிவந்தால் சிறிய மரமாக இருக்கும்போதே காய்க்க ஆரம்பிக்கும்.

காய்க்க ஆரம்பித்த முதல் ஆண்டில் வருமானம் சற்று குறைவாகவே இருக்கும்.

பின்பு இரண்டாவது ஆண்டில் ஓரளவு வருமானமும். மூன்றாவது ஆண்டிலிருந்து ஒரு மரத்தில் 15 தொடக்கம் 25 கிலோ விதைகள் வரையும் கிடைக்கும்.

இந்த அடிப்படையில் 1 ஏக்கருக்கு, 2500கிலோ முந்திரி விதைகள் வரை கிடைக்கும். 1 கிலோ விதைகள் இலங்கையில் தற்பொழுது 350 தொடக்கம் 400 ரூபாய் வரை வியாபாரிகளுக்கு விற்கப்படுகின்றது.

ஆகவே ஏக்கருக்கு, 8 தொடக்கம் 10 லட்சம் ரூபாய் வரை விற்பனை செய்ய முடியும்.

காலப்போக்கில் மரங்கள் வளர வளர இதன் உற்பத்தி அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இப்போது மட்டுமல்ல எதிர்காலத்திலும் மர முந்திரிகை விதைகளுக்கு கேள்வி இருக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

ஒரு சில விவசாயிகள் என்னிடம் வியாக்கியானம் கூறுகின்றார்கள் அதாவது தங்களுக்கு இது மாதிரியான வருமானம் கிடைத்ததில்லை என்று.

முதலில் விவசாயிகள். ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். நாங்கள் கஷ்டப்படாமல் இலகுவில் பணத்தினை சம்பாதிக்க இயலாது.

மாறாக நன்றாக பராமரிக்க வேண்டும்.

குறிப்பாக மர முந்திரிகை பூக்கும் தறுவாயில் வௌவால், அணில் போன்ற பிராணிகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டும்.

### எவ்வாறு பாதுகாக்கலாம்

மரமுந்திரிகை பூக்க ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் மரத்தின் உச்சியில் வெள்ளை பொலித்தினால் தேசியக்கொடி போன்ற ஒன்றை அமைத்து வான் நோக்கி நேராக கட்டி விட வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் இரவு நேரங்களில் காற்றடிக்கும் போது பொலித்தீனில் இருந்து வரும் சத்தத்தால் வௌவால் போன்ற பறவைகள் அம்மரத்திற்கு வராது. இதனால் பூ, பிஞ்சு, பழங்களுக்கு எந்த ஒரு சேதமும் வராது அதோடு எமது உற்பத்தியும் அதிகரிக்கும்.

பிலிப்பைன்ஸ், வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளில் மர முந்திரிகை அறுவடையின் போது விதைகளை வேறாக்கி எடுத்த பின்பு. அதிலிருந்து பெறப்பட்ட பழங்களை எறிந்து விடாமல் வேறாக எடுத்து மதுபானம் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு நல்ல விலையில் ஏற்றுமதி செய்து இரட்டிப்பு வருமானத்தினை பெறுகின்றார்கள்.

முடிந்தால் இணையதளத்தில் வாசித்துப் பாருங்கள் வியட்நாமில் மரமுந்திரிகை உற்பத்தி செய்து அதிலிருந்து பெறப்படும் பழங்களை சேகரித்து 250 பழத்தில் ஒரு லிட்டர் தரமான மதுபானத்தினை உற்பத்தி செய்து இந்தியன் ரூபாய் மதிப்பில் ஒரு லிட்டர் 1500/= ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கின்றார்கள்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரை இங்குள்ள எந்த ஒரு விவசாயியும் பழங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில்லை.

மாறாக இலங்கையை பொறுத்தவரை அண்ணளவாக 95 வீதமான மர முந்திரிகை பழங்கள் அதாவது இரண்டு லட்சம் மெட்ரிக் தொன் (200000000) யாருக்கும் பயன்படாமல் பழுதாகிப் போகின்றது.

மர முந்திரிகை மட்டுமல்லாமல் எந்த ஒரு பயிர்ச்செய்கையாக இருந்தாலும்.

அது சிறந்த முறை பயிர்செய்கை யாக இருந்தால் மட்டுமே இந்த இலாபம் கிடைக்கும். இருப்பினும் மரமுந்திரிகை மரமானது மற்ற பயிர்கள் போன்று அல்லாமல் பராமரிப்பு மிக மிக குறைவாகவே இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அனுபவப்பட்ட விவசாயிகளுக்கு நன்கு தெரியும்.

மரம் முந்திரிகையானது வறட்சியைத் தாங்கி வளரும் பயிர் என்பதோடு மணல் பாங்கான இடங்களிலும் நன்றாக வளரும் மற்றும் நீர் தட்டுப்பாடு உள்ள பிரதேசங்களிலும் நன்றாக வளரும்.

மரமுந்திரிகை நடுகை செய்ய விரும்பும் பண்ணையாளர்கள் தயங்காமல் சிறிய அளவில் மட்டுமல்லாமல். பெரிய அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கோடு உற்பத்தி செய்யலாம். மரமுந்திரிகை விதைகளானது மற்ற விதைகள் போல் இல்லாமல். மிக நீண்ட காலத்திற்கு எந்த ஒரு பழுதும் இல்லாமள் களஞ்சியப் படுத்தி வைத்திருந்து தேவைக்கு ஏற்றால் போல் உடைத்து பொதி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

0770239784
WhatsApp:0769196445

வாழ் முற்றம்
05-02-2023 முதல் புதிய இடத்தில்
551, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு எதிரில்
உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை
பனைசார் உற்பத்திப் பொருட்கள் தும்பு உற்பத்திப் பொருட்கள்
இயற்கை விவசாய மரக்கறிகள் இயற்கை விவசாய இடுபொருட்கள்
வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள் இயற்கை உரங்கள்
கைவினைப் பொருட்கள் மட்பாண்டம் பாதணிகள்
உலர் உணவுப் பொருட்கள் கடல் உணவுப் பொருட்கள்
இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள்
ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் சித்திரங்கள்
பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)
076 443 8620
உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்



# SRI LANKAN GOVERNMENT TRYING TO RESTRUCTURE DOMESTIC DEBT?





முதன்மைத் தொகையைக் குறைப்பது பல்வேறு காரணிகளைப் பொறுத்தது. அவற்றில் சில:-

- ♦ கடன் வாங்குபவரின் நிதி நெருக்கடியின் தீவிரம்
- ♦ மறுசீரமைப்பு செயற்பாட்டில் பங்கேற்க கடனாளிகளின் விருப்பம்
- ♦ மறுசீரமைப்பு நடைபெறும் ஒட்டுமொத்த பொருளாதார மற்றும் அரசியல் சூழல் போன்றன.

மொத்தத்தில் கடன் மறுசீரமைப்பின் குறிக்கோள் கடன் வாங்குபவர் மற்றும் கடன் வழங்குபவர் இருவருக்கும் நன்மை பயக்கும் ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பதாகும். அதே நேரத்தில் கடனை இறுதியில் செலுத்துவதையும் உறுதிப்படுத்துகிறது.

**ஏன் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒரு சிக்கலான மற்றும் கடினமான செயன்முறையாக இருக்கிறது?**

**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பது ஒரு சிக்கலான மற்றும் கடினமான செயலாகும். அரசாங்கத்திற்கும் அதன் கடனாளிகளுக்கும் இடையே முறையான பேச்சுவார்த்தை தேவைப்படுகிறது. இது அரசியல் தாக்கங்களையும் ஏற்படுத்தலாம். ஏனெனில், நாட்டின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் செல்வாக்கற்ற சிக்கன நடவடிக்கைகளைச் செயற்படுத்த வேண்டும் அல்லது வேறு கடினமான தேர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.**

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பது பல காரணங்களுக்காக ஒரு சிக்கலான மற்றும் கடினமான செயல்முறையாக அமைகின்றது. அவற்றில் சில:

**1. பல கடன் வழங்குநர்கள்**: உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பது வங்கிகள், நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் தனிநபர்கள் உட்பட பல கடன் வழங்குநர்களுடன் கையாள்வதை உள்ளடக்கியது. ஒவ்வொன்றும் அவர்களின் சொந்த நலன்கள் மற்றும் பேச்சுவார்த்தை நிலைகள் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் திருப்திப்படுத்தும் ஓர் உடன்பாட்டை எட்டுவது மிகவும் கடினமாக இருக்கலாம்.

**2. சட்ட மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகள்**: உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு பெரும்பாலும் சிக்கலான சட்ட மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகளுக்கு உட்பட்டது. இது நாட்டிற்கு நாடு மாறுபடும். இந்த கட்டமைப்புகள் கடன் மறுசீரமைப்புத் திட்டங்களை செயற்படுத்துவதையும் பேச்சுவார்த்தை நடத்துவதையும் கடினமாக்கும்.

**3. அரசியல் பரிசீலனைகள்**: உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பது அரசாங்கத்திற்கான உள்நாட்டு ஆதரவைப் பேணுவது அல்லது சமூக அமைதியின்மையைத் தவிர்ப்பது போன்ற அரசியல் பரிசீலனைகளுக்கு உட்பட்டது. இந்தப் பரிசீலனைகள் பேச்சுவார்த்தைகளை மற்றும் முடிவெடுக்கும் செயன்முறைகளை சிக்கலாக்கும்.

**4. பொருளாதார நிலைமைகள்:** உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் வெற்றி பெரும்பாலும் பணவீக்கம், நாணய மாற்று விகிதங்கள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதார நிலைமைகளைப் பொறுத்தது. இந்த நிலைமைகள் கடனளிப்பவர்களின் பேச்சுவார்த்தைக்கான விருப்பத்தையும் திருப்பிச் செலுத்தும் அரசாங்கத்தின் திறனையும் பாதிக்கலாம்.

**4. கடனாளர் ஒருங்கிணைப்பு**: உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு ஒரு விரிவான மற்றும் பயனுள்ள மறுசீரமைப்புத் திட்டத்தை உறுதிசெய்ய கடன் வழங்குநர்களிடையே ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. இருப்பினும், குறிப்பாக அவர்கள் வெவ்வேறு ஆர்வங்களைக் கொண்டிருந்தால் அல்லது சில கடனளிப்பவர்கள் மற்றவர்களை விட அதிக அந்நியச் செலாவணியைக் கொண்டிருந்தால் கடனாளிகளை ஒருங்கிணைப்பது கடினமாக இருக்கும்.

ஒட்டுமொத்தமாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் வெற்றிகரமான முடிவை உறுதிசெய்ய முறையான திட்டமிடல் மற்றும் பேச்சுவார்த்தை தேவைப்படும். இது ஒரு சவாலான செயன்முறையாக அமைகிறது.

**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் அரசியல் தாக்கங்கள்** (Political implications of DDR)

குறிப்பாக பொருளாதாரத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ள நாடுகளில் மற்றும் கடன் அளவுகள் அதிகமாக இருக்கும் நாடுகளில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு குறிப்பிடத்தக்க அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தலாம். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் சாத்தியமான அரசியல் தாக்கங்கள் சில:

**1. அரசியல் பின்னடைவு**: உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பது கடனாளிகள் மீது கடன் மதிப்புக் குறைப்பு ("ஹேர்கட்"), நீடிக்கப்பட்ட மீண்டும் செலுத்தும் காலங்கள் அல்லது குறைந்த வட்டி விகிதங்கள் போன்ற கணிசமான செலவுகளைச் சுமத்துவதை உள்ளடக்குகிறது. இந்த நடவடிக்கைகள் அரசியல் ரீதியாக செல்வாக்கு மிக்கவர்களாகவோ அல்லது சக்திவாய்ந்தவர்களாகவோ இருக்கும் பத்திரதாரர்களுக்கு (bondholders) குறிப்பிடத்தக்க இழப்புகளுக்கு வழிவகுக்கும். குறிப்பாக பத்திரப்பதிவுதாரர்கள் (bondholders) மறுசீரமைப்பிற்கு எதிராக பொதுக் கருத்தைத் திரட்ட முடிந்தால் இது அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் பின்னடைவுக்கு வழிவகுக்கும்.

**2. சமூக அமைதியின்மை**: அரசாங்கம் தனது கடன் கடமைகளைச் சந்திக்க செலவைக் குறைக்க அல்லது வரிகளை உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் இருந்தால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு குறிப்பிடத்தக்க சமூகத் தாக்கங்களை ஏற்படுத்தலாம். இவ்வாறான சிக்கன நடவடிக்கைகளால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் சமூக அமைதியின்மைக்கு வழிவகுக்கலாம். எனவே, பாதிக்கப்படக்கூடிய மக்களின் மீதான மறுசீரமைப்பின் தாக்கத்தைத்

தணிக்க இலக்கு நிவாரண நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சமூக செலவினங்களை அதிகரிக்க அல்லது வழங்குவதற்கான அழுத்தத்தையும் அரசாங்கம் எதிர்கொள்ளக் கூடும்.

**2. அரசியல் ஸ்திரத்தன்மை:** அரசாங்கம் அதன் கடன் கடமைகளைச் சந்திக்க மக்கள் விரும்பத்தகாத முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு அரசியல் ஸ்திரத்தன்மைக்கான தாக்கங்களையும் ஏற்படுத்தலாம். மறுசீரமைப்பினால் ஏற்படும் அரசியல் வீழ்ச்சியை அரசாங்கத்தால் நிர்வகிக்க முடியாவிட்டால் அது அதன் அதிகாரம் அல்லது சட்டபூர்வமான சவால்களை எதிர்கொள்ள நேரிடும். குறிப்பாக ஏனைய அரசியல் கட்சிகள் அதிகாரத்தினை அல்லது செல்வாக்கைப் பெறுவதற்கு இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்படும்போது இது உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும்,.

**3. சர்வதேச உறவுகள்:** குறிப்பிடத்தக்க வெளிநாட்டுக் கடனைக் கொண்டிருந்தால் அல்லது வெளிநாட்டு உதவி மற்றும் கடன்களை நம்பியிருந்தால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒரு நாட்டின் சர்வதேச உறவுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தலாம். மறுசீரமைப்பு முறைமையானது கடன் வழங்குபவர்கள் அல்லது சர்வதேச அமைப்புகளுடன் பதற்றங்களுக்கு வழிவகுப்பதுடன், அமைப்புகளுடனான தொடர்ச்சியான ஆதரவினை ஈட்டுவதற்கு அதிக நிதி ஒழுக்கம் அல்லது சீர்திருத்தங்களைக் பேணுவதனைக் கோரலாம். இது இராஜதந்திர சவால்களுக்கு வழிவகுக்கும் அல்லது உள்நாட்டில் பிரபலமில்லாத கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் அழுத்தத்திற்கு வழிவகுக்கும்.

### உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது அரசாங்கம் செயல்படுத்த விரும்பாத சிக்கன நடவடிக்கைகள் எவை?

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பது தனிநபர்கள், பெருநிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய உள்நாட்டு கடனாளிகளுடன் அதன் கடன் கடமைகளை மறுசீரமைக்க ஓர் அரசாங்கம் முயல்வதனை குறிக்கின்றது. அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்கும், நாட்டின் வரவுசெலவுத் திட்டத்தை மீண்டும் சமநிலைக்குக் கொண்டுவருவதற்கும் கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக சிக்கன நடவடிக்கைகள் பொதுவாக செயற்படுத்தப்படுகின்றன.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது அரசாங்கம் செயற்படுத்தக்கூடிய பிரபலமற்ற சிக்கன நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும்:

**1. பொதுத்துறை ஊதியங்களில் குறைப்பு:** இந்த நடவடிக்கையில் அரசு ஊழியர்களுக்கான ஊதியக் குறைப்பு, சலுகைகளில் குறைப்பு மற்றும் சில வேலை நிலைகளை நீக்குதல் (Elimination of certain job positions) ஆகியவை அடங்கும்.

**2. சமூகத் திட்டங்களில் குறைப்பு:** இந்த நடவடிக்கையில் உணவு உதவி மற்றும் வேலையின்மை நலன்கள் போன்ற சமூக நலத் திட்டங்களில் வெட்டுக்கள் அடங்கும்.

**வரி அதிகரிப்புகள்:** இந்த நடவடிக்கையில் வருமான வரி, விற்பனை வரிகள் மற்றும் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான பிற வரிகளில் அதிகரிப்பு அடங்கும்.

**3. அரசாங்க மானியங்களில் குறைப்பு:** இந்த நடவடிக்கை விவசாயம், எரிசக்தி மற்றும் போக்குவரத்து போன்ற தொழில்களுக்கான மானியங்களைக் குறைக்கும்.

**5.அரசுக்குச் சொந்தமான சொத்துக்களைத் தனியார்மயமாக்குதல்:** இந்த நடவடிக்கையானது பயன்பாடுகள், விமான நிலையங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்புச் சொத்துக்கள் போன்ற அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதை உள்ளடக்கும்.

இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் பொதுமக்களிடம் செல்வாக்கற்றது. சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் ஸ்திரமின்மைக்கு இவை வழிவகுக்கும். இருப்பினும், இவை ஒரு நாட்டின் நிதிநிலையை மீண்டும் நிலையான பாதையில் கொண்டு செல்லவும், அதன் கடன் கடமைகளைத் திருப்பிச் செலுத்துவதைத் தவிர்க்கவும் சில நேரங்களில் அவசியமாகின்றன.

கட்டுரையாளரைத் தொடர்புகொள்ள -
+94-777-802-900
Email: swaminathan@agsarma.com





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

# கோழிகளுக்குப் பூச்சிகளை உணவாகப் பயன்படுத்தல்

> கொல்லைப்புறத்தில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகள் பெரியளவு எண்ணிக்கையில் முட்டையிடாதவை. ஏனைய நவீன ரக கோழிகளோடு ஒப்பிடும் போது குறைந்த வளர்ச்சி வீதத்தையே கொண்டவை. எனினும் அவற்றின் உற்பத்திகளான முட்டை மற்றும் இறைச்சிக்கு அதிக கேள்வி உள்ளது. சுவையும் அதிகம்.

கொல்லைப்புறங்களில் வளர்க்கப்படும் கோழிகள் சுற்றுச் சூழலிலுள்ள பூச்சி புழுக்கள் இலை தழைகளை உணவாக கொண்டு வாழ்பவை. அதாவது தமக்கு தேவையான புரதம், எரி சக்தி, தாதுப்புக்கள், விற்றமின்கள் போன்றவற்றை சூழலிலுள்ள பொருட்களில் இருந்து பெற்றுக் கொள்கின்றன. தமது உடல் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் தேவைப்படும் புரதச்சத்தை பூச்சி புழுக்களில் இருந்தும் சக்தியை பெற வீசப்படும் தவிடு, அரிசிக் குருணல், கழிவு உணவுகளிலிருந்தும் ஏனைய சத்துக்களை இலை தழைகளில் இருந்தும் அவை பெறுகின்றன.

மேற்படி கொல்லைப்புறத்தில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகள் பெரியளவு எண்ணிக்கையில் முட்டையிடாதவை. ஏனைய நவீன ரகக் கோழிகளோடு ஒப்பி



டும் போது குறைந்த வளர்ச்சி வீதத்தையே கொண்டவை. எனினும் அவற்றின் உற்பத்திகளான முட்டை மற்றும் இறைச்சிக்கு அதிக கேள்வி உள்ளது. சுவையும் அதிகம்.

இந்தக் கட்டுரை, தற்காலத்தில் அதிக வளர்ச்சி வீதத்தையும் அதிக முட்டைகளையும் தரக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள நவீன கொல்லைப்புற கோழிகளுக்கு

மேலதிக புரத உணவாக புழு பூச்சிகளை வழங்குவது தொடர்பானது. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள சோயா, மீன் உணவு, சோளம் போன்ற கோழித்தீவன மூலங்களின் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக கோழித்தீவனங்களில் அவற்றின் அளவு குறைக்கப்பட்டு மாற்று பொருட்களை நோக்கி நகரும் நிலையே உள்ளது.

பயன்படும் மாற்று மூலங்களில் பல தேவையான உணவுக் கூறுகள் இருப்பதில்லை. அத்துடன் அந்த மாற்று உணவுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது என்பதுடன் கோழிகளும் அவற்றை விரும்பி உண்பதுவும் இல்லை. இந்த நிலையில் இயற்கையில் கோழிகள் விரும்பி உண்ணும் பூச்சி புழுக்களை புரத மாற்று மூலமாக வழங்குவது தொடர்பாக உலகளவில் பல ஆய்வுகள் இடம்பெறுகின்றன. சில நாடுகள் தமது கோழிகளுக்கு பூச்சிகளை உணவாக வழங்கத் தொடங்கியுள்ளன. சில நாடுகள் அதற்குரிய அனுமதியை விரைவில் வழங்கவுள்ளன. அண்மைக் காலத்தில் இது தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் பல சர்வதேச விலங்கு உணவு மற்றும் மருத்துவ ஏடுகளில் வெளிவருகின்றன. பூச்சி புழுக்கள் கடல் சிப்பி, சோகிகள், அல்காக்கள் என மாற்று உணவுகளை அண்மைக்கால விலங்கு உணவு ஆய்வாளர்கள் நாடத் தொடங்கியுள்ளனர்.






சில நாடுகளில் பூச்சிகளை வர்த்தக ரீதியில் வளர்த்து அவற்றை தூளாக்கி பொதிகளில் அடைத்து விற்கின்றனர். அவை மனித பாவனைக்கும் விலங்கு உணவாகவும் பாவிக்கப் படுகின்றன. எங்கள் நாட்டிலும் கோழிகளுக்கு கறையான் வளர்த்து உணவாக பலர் வழங்குகின்றனர். கறையான் தரமான புரத உணவு. கோழிகள் அதனை விரும்பி உண்ணும். அத்துடன் சீனா போன்ற நாடுகளில் மனிதர்களும் தமது புரத உணவுத் தேவைக்காக பூச்சிகளை மட்டுமல்ல பாம்பு, பல்லி, நாய் நரி என சகலதையும் உண்பதை காணலாம். உண்மையில் அந்த நாடுகளில் உள்ள அதிகரித்த சனத்தொகை காரணமாகவும் உணவுப் பொருட்களின் தேவை காரணமாகவும் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம். தொடர்ச்சியான மனித சனத்தொகை அதிகரிப்பு மற்றும் புரத உணவுகளின் தட்டுப்பாடு எதிர்காலத்தில் எமது நாடுகளில் ஊட இந்த நிலையைத் தோற்றுவிக்கலாம்.

விவசாயத்தில் கடும் தொல்லைகளாக உருவாகியிருக்கும் பூச்சிகளை ஒழிக்க பல இரசாயன பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த பூச்சிக கொல்லிகள் பூச்சிகளை அழிப்பதோடு மட்டுமன்றி பயிரிடப்படும் உணவுகளை உண்ணும் மனிதர்களையும் பல வகையில் பாதிக்கின்றன. இந்த நிலையில் இப்பூச்சிகளை



ஏதாவது ஓர் இயற்கையான பொறியினை வைத்து பிடித்து அவற்றை விலங்கு உணவாக பயன்படுத்த முடியும். ஆனால் பூச்சிக் கொல்லிகள் கொண்டு கொல்லப்பட்ட பூச்சிகள் ஆபத்தானவை.

இயற்கையில் கோழிகள் தமக்கு பொருத்தமான ஊட்டச்சத்துள்ள நஞ்சற்ற பூச்சி புழுக்களை தேர்ந்தெடுத்து உண்ணும். உண்மையில் சகல பூச்சி புழுக்களும் உணவாக வழங்க முடியாதவை. சில பூச்சிகளின் வெளிப்புறத்திலுள்ள chitin எனும் புற ஓடு நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டுவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. இயற்கையில் பல வகையான பூச்சிகள் உள்ளன. அவற்றை பற்றிய சரியான ஆய்வுகள் செய்யப்பட்டு அடங்கியுள்ள அமினோ அமில கூறுகள் ஏனைய ஊட்டச் சத்துக்கள் நச்சுப் பொருட்கள் ஆராயப்பட்டு கோழிகள் மற்றும் விலங்குகளுக்கு வழங்கலாம். பூச்சிகளை நேரடியாகவும் உலர்த்தியும் மாவாக்கியும் வழங்குவதை காண முடிகிறது. எதிர்காலத்தில் இது தொடர்பான பல தொழிற்சாலைகள் உருவாகலாம். அண்மைக் காலத்தில் பூச்சிகளை கொண்டு தயாரிக்கப்படும் உணவுகளை பல நாடுகள் தமது நன்னீர் மீன் வளர்ப்புக்கு பயன்படுத்த அனுமதி கொடுத்துள்ளன.

நான் முன்பு கூறியதை போல கோழி வளர்ப்புக்கும் அதிகளவில் பயன் படுத்தப் படுகின்றன. எதிர் காலத்தில் இந்த துறையில் இடம்பெறும் ஆய்வுகளின் அடிப்படையில் இன்னும் பல துறைகளுக்குள் பூச்சி உணவுகள் பயன்படுத்தப் படலாம். அதிகரித்துள்ள மனித சனத்தொகையினால் தோன்றியுள்ள அதிகரித்த உணவுத் தேவை காரணமாக பல உணவு உற்பத்திகளை பல மடங்கு உயர்த்த வேண்டிய நிலையில் கணிசமாக புரத உணவுகளைத் தரும் கோழிப்பண்ணைகளில் தீவனத்துக்கு பல மாற்று வழிகளை தேட வேண்டியுள்ளது. வழமையான கோழித் தீவன மூலங்களின் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு இந்த மாற்று மூலங்களை கண்டறிய தூண்டுகின்றன. அந்த வகையில் தோன்றியுள்ள தட்டுப்பாடுகள் காரணமாக பூச்சி உணவு எதிர்காலத்தில் மிக அவசியமான ஒன்றாகவே கோழி வளர்ப்பில் இருக்கப்போகிறது.



வேதநாயகம் தபேந்திரன்

> “ தேங்காய்க் கொப்பறாத் துண்டுகள் ஐந்து முதல் ஏழு நாள்கள் வரையில் நன்கு முற்றிக் காய்ந்த பின்பாக எண்ணெய் ஊற்றும் மில்லில் கொடுத்து எண்ணெய்யாக வடித்துக் கொள்ளுங்கள். கிடைக்கும் தேங்காய் எண்ணெய்யை வாய் அகன்ற பாத்திரம் ஒன்றினுள் விட்டு மூன்று தினங்கள் காலை பத்து மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரையிலான உச்ச வெய்யில் நேரத்தில் காய விடுங்கள் ”

# விரயமின்றி வருமானம் பெற...

கோயில் திருவிழாக்கள் களைகட்டும் காலம் இது. புரட்டாதி மாதம் வரையில் ஊர் ஊராக அமர்க்களம்தான். தேர்,தீர்த்தம் வந்தால் தூக்குக் காவடி,பறவைக் காவடி எடுத்துத் தமது உடலை வருத்தி நேர்த்தி தீர்ப்போர்கள் இருக்கின்றனர்.

திருவிழா நடைபெறும் கோயிலுக்கு இன்னுமொரு கோயிலில் வைத்துக் காவடி முள் குத்தி ஆரம்பிப்பார்கள். அந்தக் கோயிலில் இருந்து திருவிழா நடைபெறும் கோயிலுக்கு உறவுகள் சூழ வரும் போது தேங்காய்களை வீதியில் வைத்து உடைத்தபடியே வருவார்கள். ஒரு காவடிக்கு 50 முதல் 100 வரையான தேங்காய்கள் வீதியில் வைத்து உடைத்துக் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

ஊரிலுள்ள ஒரு கோயிலுக்கு ஐந்து முதல் பத்துப் பதினைந்து வரையிலான பறவை, தூக்குக் காவடிகள் வருவது வழக்கம். அப்படிப் பார்த்தால் வீதிகளில் அடிக்கும் தேங்காய்களின் எண்ணிக்கையைப் பாருங்கள். அந்தத் தேங்காய்கள் அனேகமாக பெரிய வாகனச் சக்கரங்களில் உழக்குப்பட்டுச் சிதைவடைந்து அழிவடைவதைப் பரவலாகக் காண முடிகிறது.

ஏன் இந்தத் தேங்காய்களை பெரியதொரு உரப் பையில் சேகரித்துப் பக்குவமாகக் காயவைத்து வருமானமாக்கக்கூடாது?

உழைப்பதற்கு வெட்கப்படாதீர்கள். உங்களைப் பகடி பண்ணுபவர்களுக்குப் பகடி பண்ண மட்டுமே தெரியும்.

உரப்பை ஒன்றில் தேங்காய்களைச் சேகரித்தால் உங்களுக்கு வருமானம் ஆகின்றது. அதே வேளையில் தேங்காய்ச் சிதறல்களால் வீதியில் செல்லும் பயணிகளுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுக்கவும் முடியும்.

காவடிக்கு அடிக்கும் தேங்காய்களைச் சேகரித்து உங்களது வீட்டில் நன்கு வெய்யில் படும் இடத்தில் 03 தினங்கள் பகல் வேளையில் காய வையுங்கள். காகம், நாய், ஏனைய பறவைகள் தூக்காத வாறு கம்பி வலை அல்லது நுளம்பு வலையால் மூடி விடுங்கள். இரவு வேளையில் நாளாந்தம் தேங்காய்களை எடுத்துப் பனிப் பிடிக்காதவாறு வீட்டினுள் வையுங்கள்.

மூன்று நாள் பகல் வெய்யிலில் தேங்காய்கள் காய்ந்த பின்பாக அவற்றின் சிரட்டை ஓடுகள் கழரும். அவற்றைக் கழற்றி எடுத்த பின்னர் நாலாம் நாள் காலையில் அந்தத் தேங்காய்களைத் தண்ணீர் பாத்திரமொன்றினுள் இட்டுத் தேங்காய்த் தும்புத் தூசுகளைக் கழுவி எடுங்கள். அவற்றைச் சிறு துண்டுகளாக நறுக்குங்கள். பின்பு நன்கு வெய்யில் படும் இடமொன்றில் முன்னர் சொன்னது போலக் கம்பி வலையால் அல்லது தூய்மையான நுளம்பு வலையால் மூடிப் பாதுகாப்பாக வையுங்கள்.

தேங்காய்க் கொப்பறாத் துண்டுகள் ஐந்து முதல் ஏழு நாள்கள் வரையில் நன்கு முற்றிக் காய்ந்த பின்பாக எண்ணெய் ஊற்றும் மில்லில் கொடுத்து எண்ணெய்யாக வடித்துக் கொள்ளுங்கள்.

கிடைக்கும் தேங்காய் எண்ணெய்யை வாய் அகன்ற பாத்திரம் ஒன்றினுள் விட்டு மூன்று தினங்கள் காலை பத்து மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரையிலான உச்ச வெய்யில் நேரத்தில் காய விடுங்கள். மழை நீர் படக் கூடாது. எண்ணெய் காய்ந்து தெளிந்து வரும். பின்னர் அவற்றைத் தூய்மையான ஈரலிப்பு இல்லாத போத்தலில் விட்டு விற்பனை செய்து கொள்ளுங்கள்.

மேலதிக வருமானத்தை எப்படி ஈட்டலாமெனச் சிந்திப்போர் இந்த இலகுவான வழிமுறையைப் பின்பற்றிப் பாருங்கள்.

# எங்கட ஊருச்சி

> சில மீன்கள் சில சீசனுக்கே பெருமளவு பிடிபடும். உதாரணமாக ஓரா மாரியிலும் கீளி பங்குனி சித்திரை மாதங்களிலும் அதிகம் பிடிபடும். மாரி காலத்தில் கடல் அளவுக்கு மிஞ்சி நிரம்பின காலத்தில் மீன்கள் பாலத்தின்ரை ரெண்டு பக்கமும் ரோட்டுக்கு மேலாலை கட்டாக்காலி மாடுகள் வெளி பாயுறது மாதிரி பாஞ்சு போறதைப் பார்க்கலாம்.



எங்கடை ஊர் வெள்ளைக் கடல் மீனுக்கு எப்பவும் கடும் கிராக்கி. வெள்ளைக்கடல் எண்டது பொன்னாலைக்கும் காரைநகருக்கும் இடைப்பட்ட பரவைக் கடலாகும் அது கிழக்கை அராலி யிலை இருந்து ஊரி வரைக்கும் மேற்கே தினகரன் பிட்டி பொன் னாலை வரைக்கும் பாலத்தின்ரை ரெண்டு பக்கமும் நீண்டு கிடக்கும். கோடையில புருசனோடை சண்டை போட்டுக் கோவிச்ச பொம்பிளையின்ரை முகம் மாதிரிக் காஞ்சு போயிருக்கும் மாரி எண்டால் வெளிநாட்டால கனகாலத் துக்குப்பிறகு வந்த புருசனைக் கண்ட பொம்பிளையின்ரை முகம் மாதிரி அலை பொங்கப் பொங்கப் பூரிச்சுப்போய் இருக்கும்.

ஓரா ஒட்டி, திரளி, விளை, பூஞ்சைக் கண்ணி, மதணன், கொய், பாலை, கயல், மணலை, திருவன், கீளி, கலவாய், நண்டு, இறால், எண்டதுதான் இஞ்சை அதிகமாக பிடிபடும். இறால் வெள்ளை இறாலோ கறுப்பு இறாலோ ஒரு அளவுக்கு மேலால் வளராது. சில ஆக்களின்ரை மனம் மாதிரி. அது மாதிரி நண்டும் பெரிசா வளராது. பெரிசா வளராத இறாலைக் கூனியெண்டும் நண்டை குசுக்காய் நண்டெண்டும் சொல்லுவம்.

சில மீன்கள் சில சீசனுக்கே பெருமளவு பிடிபடும். உதாரணமாக ஓரா மாரியிலும் கீளி பங்குனி சித்திரை மாதங்களிலும் அதிகம் பிடிபடும். மாரி காலத்தில் கடல் அளவுக்கு மிஞ்சி நிரம்பின காலத்தில் மீன்கள் பாலத்தின்ரை ரெண்டு பக்கமும் ரோட்டுக்கு மேலாலை கட்டாக்காலி மாடுகள் வெளி பாயுறது மாதிரி பாஞ்சு போறதைப் பார்க்கலாம். முந்தி சில வேளேகளில மண்டான் எண்டிற பெரிய ஊசியைப் பாவிச்சு ரோட்டில் நிண்டு மீனைக் குத்திப்பிடிக்கிறதையும் பாக்கலாம்.

பனி காலங்களில இறால் அதிகம் பிடிபடும். பாலத்தை அண்டியுள்ள ஊர்களில உள்ளவை இறால் வலை படுத்திருப்பினம். அநேகமாக இரவில அவை சயிக்கில்களில வலையளைக் காவிக் கொண்ணந்து கடலில போடுவினம். விடியக்காலமை வலையளைப்பிரிச்சு இறால்களைப் பொறுக்குவினம். இரவில கடலில நிலவுக்குப் போட்டியா எரியிற சூளை விளக்குகள் பார்க்கத் நல்ல வடிவாயிருக்கும் . இறால் பிடிபாடு காரணமாக வாற சண்டை சச்சரவுகள் சில வேளைகளில் வெட்டுக் குத்திலும் முடிஞ்சிருக்குது.

முந்திக் காலமயிலை பெண்டுகளும் ஆம்பிளையளுக்குக்குப் போட்டியா தலையில ஓலைத்தொப்பி போட்டபடி, சீலையை முழங்கால் வரை உயர்த்திக் கட்டிகொண்டு, சிலர் இடைக்கட்டு மட்டும் கட்டியிருபினம். வரிசையில நிண்டு கரப்புகளைப் பாவிச்சு நண்டு இறால் பிடிப்பினம்.

நாங்கள் புன்னாலை பாலத்திற்குப் போய் இல்லாட்டில் வலந்தலைச் சந்திக்குச் போய் காலமை இல்லாட்டிப் பின்னேரங்களில் மீன் வாங்கிக் கொண்டு வருவம். வாங்கியந்த பிறகு அரிவாளில வைச்சு செதில்களைச் சீவியெடுத்துப் போட்டு பேந்து சின்ன சின்னத் துண்டுகளா குழம்புக்கு சொதிக்கு பொரியலுக்கு எண்டு வெட்டுவம். இறால் நோண்டுறதுக்கும் கீளி நோண்டுறதுக்கும் கொஞ்சம் பொறுமை வேணும். ஆச்சி கீளி நோண்டின பிறகு மண்சட்டியிலை வைச்சு கையால சுத்திச் சுத்தி தேய்ப்பா அப்பதான் பிரால் வெடில் போகும் எண்டு சொல்லுவா.

குழம்புக்கு எண்டு ஆச்சி அம்மியில தேங்காய் மல்லி மிளகாய் வைச்சு நல்ல விழுதாக வரும் வரை அரைச்சு உருட்டி உருண்டையாக எடுத்து போடவேண்டிய உள்ளி வெங்காயம் கருவேப்பிலை மண்சட்டியிலை போட்டுக்கூட்டிக்கறி விறகு அடுப்பில் வைப்பா. குழம்பு மணம் வேலிக்குள்ளால வெளிக்கிட்டு றோட்டுக்குப் போகும். இதே மாதிரி பொரியலுக்கும் உப்பு மிளகாய் அரைச்சு கலக்கி பொரிப்பா குழம்பு மணத்துக்குப் பின்னால பொரியல் மணம் வால் பிடித்துக் கொண்டு போகும். சொதியும் தேங்காய் உள்ளி இஞ்சி வைச்சு அரைச்சே கூட்டி வைப்பா.

பொரியல் கொஞ்சம் அப்பு கள்ளுக்கு பைற்சுக் கெண்டெடுப்பார். கீளிப் பொரியல் எண்டால் கொஞ்சம் கூடக்குறைய சிரட்டைக்கை அள்ளிக்கொண்டு போவார். கிழவி எட விழுவானே நான் பெடியளுக்கெண்டு பொரிச்சா நீ கள்ளுக்கெண்டு கொண்டு போறாயே நாசமாப் போவாயெண்டு அன்பாப் பேசுவா. ஊரரசிச் சோறும் இந்தக் கறியளும் சாப்பிட்ட நானுட்பட்ட தலைமுறை குடுத்து வைச்ச தலைமுறை அதிலும் வெள்ளைக்கடல் கயல் மீன் குழம்பிற்கு நிகராக இன்னொரு கறி இன்னும் கண்டுபிடிக்கேல்லை எண்டுதான் சொல்ல வேணும்.



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -




இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2023இல் வெளியிடப்பெற்றது.